விலை: 60.00
பக்கங்கள் - 24
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
valampurii


சங்கு 25 E-mail: valampurii@yahoo.com,

ஒலி 271 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 30 ஞாயிற்றுக்கிழமை (15.09.2024) தொலைபேசி 222 3378 பக்ஸ்- 222 7829

රනිල් වික්‍රමසිංහ
ரணில் விக்கிரமசிங்ஹ
Ranil Wickremesinghe

# 2 மில்லியன் இலங்கையர்களுக்கு 'உறுமய' வழங்கும் சொந்தக் காணிக்கான உறுதிப் பத்திரங்கள்

# அஸ்வெசும பயனாளிகளாக 1,854,000 இற்கும் மேற்பட்ட நபர்கள்





ரணில் விக்ரமசிங்ஹ இலங்கையின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இரண்டு மில்லியன் மக்களின் காணிப் பிரச்சனைகளைப் படிப்படியாகவும் துரிதமாகவும் தீர்ப்பதற்காக 'உறுமய' காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளார்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக 2 மில்லியன் மக்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்படுவதுடன், கொழும்பு நகரில் குறைந்த வருமானம் பெறும் அரசுக்குச் சொந்தமான வீடுகளில் 4 வருடங்களாக வாழ்பவர்களுக்கு அதன் உரித்துக்கள் கையளிக்கப்படுவது உறுதிப்படுத்தப்படுகின்றது.

2024இன் முற்பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹ அதிகாரிகளுக்கு தேசிய 'உறுமய' உறுதிப்பத்திரங்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தை ஒரு வருடத்திற்குள் பூர்த்தி செய்யுமாறே பணித்திருந்தார். 'உறுமய' நிகழ்ச்சித் திட்டம் முதலில் 2002 மற்றும் 2003இல் ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்பட்டது. அந்நிகழ்ச்சித் திட்டம் இற்றைக்கு 20 வருடங்களுக்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், இலங்கை மக்களுக்கு இதற்கு முன்னரே காணி உரிமையை வழங்கியிருக்கலாம்.

அதுமட்டுமன்றி, நடுத்தர குடும்பங்களுக்கு வீடுகளை அமைப்பதற்கான சலுகை அடிப்படையிலான கடன் வசதிகளும் வழங்கப்படும். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் தமக்கென வீடுகளை உரித்தாக்கிக் கொள்ள அவர்களுக்கு இடமளிக்க வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹவின் தலைமையில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்நிகழ்ச்சித் திட்டத்தின் வாயிலாக அனைவருக்கும் சொத்துரிமை உறுதி செய்யப்படும். மேலும், சொத்துரிமை தொடர்பில் தோட்டத் தொழிலாளர்களுக்கான புதிய கிராமங்கள் உருவாக்கப்படுவதுடன், லயன் அறைகளில் வாழ்பவர்களுக்கு காணித் துண்டொன்றை உரிமையாக்கிக் கொள்ளும் உரிமை வழங்கப்படும். அரச இடையீட்டில், எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்குள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளின் கீழ் சில வீடமைப்புத் திட்டங்கள் அமுல்படுத்தப்படும். நாட்டின் அனைத்துப் பிரதான நகரங்களையும் உள்ளடக்கியவாறு, பல மாடிகளைக் கொண்ட அடுக்குமாடி வீடுகளை அமைக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்படுவர்.


## ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹ சொத்துரிமைக்கான உத்தரவாதத்தை அனைவருக்கும் அளிப்பார்




ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பேற்ற பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

**அஸ்வெசும** இந்நலன்புரி அனுகூலங்கள் மாற்றுத் திறனாளிகள், பாதிக்கப்படக் கூடியவர்கள், வறியவர்கள் மற்றும் மோசமான வறுமையில் வாடுபவர்கள் ஆகிய நான்கு சமூக மட்டத்தினர் மத்தியில் விநியோகிக்கப்படும். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மாதாந்தம் ரூ.15,000இற்கான அனுகூலம் கிட்டும். அதுமட்டுமன்றி, மாற்றுத் திறனாளிகள், வயது முதிர்ந்தோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கு வழங்கப்பட்ட அனுகூலங்கள் தடையின்றி தொடர்ச்சியாக வழங்கப்படும்.


இக்கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கென அரசு 58.5 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. அதனூடாக முதலாம் கட்டத்தில் இவ்வனுகூலம் தொடர்பில் விண்ணப்பிக்க முடியாமற்போன அல்லது தவறியவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டத்திற்காக 450,924 பேர் விண்ணப்பித்துள்ளதுடன், முதலாம் கட்டத்தில் தகைமை பெற்ற 1.8 மில்லியன் பேர் பயன்பெறுகின்றனர். 1,854,000 பேருக்கு மேற்பட்ட எண்ணிக்கையானவர்கள் பயனாளிகளாகத் தகைமை பெற்றுள்ளனர்.




ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பேற்ற பின்னர் பணவீக்க வீதம் கட்டுப்படுத்தப்பட்டு குறைந்துள்ளது.





ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பேற்ற பின்னர் அந்நிய செலாவணி இருப்பு அதிகரித்துள்ளது.





ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பேற்ற பின்னர் வெளிநாட்டில் தொழில்புரிவோர் அனுப்பும் பணம் அதிகரித்துள்ளது.

## பெருந்தோட்டத்துறை சமூகம் - ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரித்து, வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டது. தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன், வீடு மற்றும் காணியின் உறுதிப்பத்திரங்களை தோட்டத்துறை மக்களிடம் கையளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். தோட்டத்துறை மக்களுக்கு லயன் அறைகளுக்குப் பதிலாக கிராமங்களை அமைக்கும் கருத்திட்டம் 2025இல் ஆரம்பிக்கப்படும்.




ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பேற்ற பின்னர் கடன் வட்டி வீதம் குறைந்துள்ளது.




ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பை ஏற்ற பின்னர் ஏற்றுமதிகள் அதிகரித்துள்ளன.




ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பேற்ற பின்னர் அரச வருமானம் அதிகரித்துள்ளது.




ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்ஹ பொறுப்பேற்ற பின்னர் பெற்றோலின் விலை குறைந்துள்ளது.




ரணிலால் இயலும்

රනිල් වික්‍රමසිංහ
ரணில் விக்ரமசிங்ஹ
Ranil Wickremesinghe

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
19 - 12 - 1961



இறப்பு
13 - 09 - 2024

## வைரமுத்து இராசேந்திரம்

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து இராசேந்திரம் அவர்கள் 13.09.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் வசிகலா அவர்களின் பாசமிகு கணவரும் வைஸ்ணவி, யந்துர்சன்(பிரான்ஸ்), பிரவீனா, விதுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசமலர்(பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான கணேசராணி, மனதரன், பாலச்சந்திரன் மற்றும் ரவிச்சந்திரன் (ஆசிரியர் - யா/பெரியபுலம் ம.வி), ஜெயசுதா(கனடா) ஆகியோரின் சகோதரனும் புனிதராஜா, ரஞ்சினிதாஸ், அமரர் சாந்தகுமாரி, ரஜனி, சர்மிளா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), சிவபாலன், காண்டீபன், அம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் பொபிதா, தினகரன், ஜீவகரன், ரஜிதா, பவிதா, பானுஜன், பாவனா, மதுஷன் ஆகியோரின் மாமனாரும் கம்சா, தர்சிகன், கிரிசாந், பிரசாந், மஞ்சுயன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.09.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சிறுப்பிட்டி காளையன்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்

(1938)


## New City கோழி Farm

34 வருட பூர்த்தியை முன்னிட்டு கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில் கோழிகள், முட்டைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

- 24 மணிநேர சேவை
- புறோயிலர் இறைச்சி
  சில்லறை - 1000 /=
  10 Kg மேல் - 950 /=
- உயிருடன் புறோயிலர்
  1 Kg – 620 /=
- உயிருடன் தேவைப்படுபவர்கள் முதல்நாள் காலை 10 மணிக்கு முன்பு பதிவு செய்யவும்

(1937)

**New City கோழி Farm**
சின்னக்கடை மார்க்கட் முன்பாக
குருநகர், யாழ்ப்பாணம்.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். சாவகச்சேரியில் 4 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A-9 வீதியில் இருந்து கல்வயில் செல்லும் பிரதான காபெற் வீதி முகப்புடன்
- A-9 வீதியில் இருந்து 500 மீற்றர் தூரத்தில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- சாவகச்சேரி பஸ் நிலையம் 1 ½ Km தூரம்
- சாவகச்சேரி மகளிர் பாடசாலை 1 Km தூரம்

(1937)

தொடர்புகளுக்கு:
077 294 1521, 077 329 4130


# 3ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் விஜயரட்ணம் புஸ்பலீலா (கலா)



காலத்தின் கண்ணூறில்
எம் வானத்தின் நிலவிழந்து
இன்றோடு மூன்றாண்டு

முடிவறியாப் பயணத்தில்
தாய்ப் பறவைச் சிறகோய்ந்து
திக்கற்று நாம் திணற
இளங்காற்றில் இணைந்துந்தன்
மென் சொற்கள் எமை இயக்கும்
விழி கூசாதொரு ஒளியாய்
எமக்கிங்கு வழிகாட்டும்
கனவறுந்து கண்விழித்த
நடுச்சாமப் பொழுதுகளில்
தலை தடவி எமைத் தேற்றும்

தீரா ஓர் நதி
பாய்கின்ற நிலங்களின்
பாத்திரமாவதைப் போல்
இனியதொரு இல்லாளாய்
அரவணைக்கும் அன்னையாய்
சொத்தாகச் சேகரித்த
பத்து முத்துக்களின் அம்மம்மாவாய்
நீ கொண்ட பாத்திரத்தில்
குறையேதும் கண்டதில்லை

இறையாகி ஒளிர்கின்ற
எம்பதியின் தேவதையே
இன்னும் ஒளிவேண்டும்
எம்மிருளை கடந்தேக.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

(337)

"புஸ்பநிவாஸ்"
அண்ணா சிலையடி.

- கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விலை: 60.00
பக்கங்கள் : 24
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 271 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 30 ஞாயிற்றுக்கிழமை (15.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிச்சயம் தீர்வு தருவேன்!




## ஜனாதிபதி ரணில் யாழில் பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வினை நிச்சயமாகப்பெற்றுக்கொடுப்பதோடு வடக்கு மாகாணத்தையும் துரிதமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று யாழில் வைத்து உறுதியளித்துள்ளார்.

யாழ்ப்பாணம் முற்றவெளி விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற "ரணிலால் இயலும்" பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் ▷23

## ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம்

# இனவாதக் கருத்துக்கள் தெற்கில் எடுபடவில்லை

(கொழும்பு)

**எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலையொட்டி தென்பகுதியில் தேர்தல் பிரசாரம் முன்னெப்போதும் இல்லாதவாறு களைகட்டியபோதிலும் பிரசாரக் கூட்டங்களில், இனவாதக் கருத்துக்கள் எடுபடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.**

கடந்த 2019ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதக் கருத்துக்களே தேர்தல் பிரசாரங்களில் முதன்மை பெற்றிருந்தன.

அதிலும் குறிப்பாக ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் பிரசாரக் கூட்டங்களின்போது தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்கள் கண்டபாட்டில் முன்வைக்கப்பட்டன.

ஆனால், 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது இனவாதக் கருத்துக்கள் முன்வைக்கப்படுவது கணிசமாகக் குறைந்துள்ளதாகவும் அவ்வாறு ஒரு சிலர் இன ▷23

## மோ.சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்தவர் மரணம்


### துன்னாலையில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

துன்னாலை கோவிற்சந்தைப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் நேற்று உயிரிழந்துள்ளார். ▷23


## தரம் 5 மாணவர்களை வாழ்த்துகின்றோம்



இன்று நடைபெறும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் அனைவரும் சிறந்த பெறுபேறுகளைப் பெற இறைவனின் நல்லாசிகளை வேண்டி எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்விப்பிரிவு - வலம்புரி

## சஜித் பிரேமதாஸ இன்று யாழ்.வருகிறார்



(யாழ்ப்பாணம்)


எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமாகிய சஜித் பிரேமதாஸ இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

இன்று மானிப் ▷23

## தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் வாரம்

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் 37 ஆவது நினைவு தினத்தையொட்டிய நினைவேந்தல் வாரம் இன்று ஆரம்பமாகிறது.



## புலமைப்பரிசில் பரீட்சைக்கு இடையூறு செய்யாதீர்கள்

### பரீட்சை ஆணையாளர்

(கொழும்பு)

2024ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை நடை பெறவுள்ள நிலையில் தேர்தல் பிரசாரங்கள் பரீட்சைகளுக்கு இடையூறை விளைவிக்கலாம். ▷23

## சஜித் ஆட்சிப்பீடமேறினால் ஒற்றையாட்சிக்கு ஆபத்து

### பிதற்றுகிறார் சாகல காரியவசம்

(கொழும்பு)



13 தொடர்பில் வடக்கு மக்களுக்கு ஒன்றையும், தெற்கு மக்களுக்கு வேறொன்றையும் கூறி மக்களை ஏமாற்றும் அரசியலை ஐக்கிய மக்கள் சக்தி நடத்தி வருகின்றது என ஸ்ரீ லங்கா ▷23

## பிரசாரக் கூட்டங்களில் மனித வள நிறுவனங்கள் விஜயதாஸ ராஜபக்ஷ

(கொழும்பு)

அரசியல் கட்சிகள் தமது தேர்தல் பேரணிகளில் கலந்துகொள்வதற்கான மக்களை மனிதவள நிறுவனங்களூடாகப் பெற்றுத் தமது பலத்தினை போலியாகச் சித்தரிப்பதாக ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ▷23

பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

பிரமிட் திட்டங்களில் பங்குபற்றுவது ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும்!

இலங்கை மத்திய வங்கியானது கீழ் குறிப்பிடப்படும் நிறுவனம் தடைசெய்யப்பட்ட திட்டங்களை நடாத்துகின்றது அத்துடன்/அல்லது நடாத்தியுள்ளது எனத் தீர்மானித்துள்ளது.

The Enrich Life (Pvt) Ltd.

இது 24.08.2023 மற்றும் 02.05.2024இல் இலங்கை மத்திய வங்கியின் பேஸ்புக் பக்கத்தின் மூலம் வெளியிடப்பட்ட நிறுவனங்களின்/திட்டங்களின் பெயர்களுக்கு மேலதிகமானதாகும்.

தடைசெய்யப்பட்ட வகையான பிரமிட் திட்டமொன்றினை நேரடியாக அல்லது நேரடியற்று தொடங்குகின்ற, வழங்குகின்ற, ஊக்குவிக்கின்ற, விளம்பரப்படுத்துகின்ற, கொண்டு நடாத்துகின்ற, நிதியளிக்கின்ற, முகாமைசெய்கின்ற அல்லது பணிக்கின்ற எவரேனும் ஆள் வங்கித்தொழில் சட்டத்தின் 83(இ) பிரிவின் கீழ் தண்டனைக்குரிய தவறொன்றிற்கான குற்றவாளியாதல் வேண்டும்.

இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
(Hotline) 1935 / +94 11 247 7966

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விளையாட்டுச் செய்திகள்

## சம்பியனான ஜானிக்



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் யு.எஸ்., ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு பைனலில் இத்தாலியின் ஜானிக் சின்னர், அமெரிக்காவின் டெய்லர் பிரிட்ஸ் மோதினர். முதலிரண்டு செட்களை 6-3, 6-4 எனக் கைப்பற்றிய சின்னர், மூன்றாவது செட்டை 7-5 என போராடி வென்றார்.

இரண்டு மணிநேரம், 16 நிமிடம் நீடித்த போட்டியில் அசத்திய ஜானிக் சின்னர் 6-3, 6-4, 7-5 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, யு.எஸ்., ஓபனில் முதன்முறையாக சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார்.

இது, இவரது 2 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம். ஏற்கனவே இந்த ஆண்டு அவுஸ்திரேலிய ஓபனில் கோப்பை வென்றிருந்தார்.

சின்னருக்கு, ரூ. 30 கோடி பரிசுத் தொகை வழங்கப்பட்டது. இரண்டாவது இடம் பிடித்த பிரிட்ஸ், ரூ. 15 கோடி பரிசாக பெற்றார்.

யு.எஸ்., ஓபனில் 3 ஆவது சுற்றோடு வெளி யேறிய செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஏ.டி.பி., ஒற்றையர் தரவரிசையில் 2 ஆவது இடத்தில் இருந்து 4 ஆவது இடத் துக்கு பின்தங்கினார்.

ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவ், "நம்பர்-2" இடத்துக்கு முன்னேறினார்.

யு.எஸ்., ஓபனில் கோப்பை வென்ற இத்தாலியின் ஜானிக் சின்னர் "நம்பர்-1" இடத்தை தக்கவைத்துக் கொண்டார். 2 ஆவது இடம் பிடித்த அமெரிக்காவின் டெய்லர் பிரிட்ஸ், 12 ஆவது இடத்தில் இருந்து 7 ஆவது இடத்துக்கு முன்னேறினார். ஸ்பெயினின் அல்காரஸ் 3 ஆவது இடத்தில் நீடிக்கிறார். (நி-6)

## லிவிங்ஸ்டன் அதிரடி இங்கிலாந்து வெற்றி




அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2 ஆவது ரி20 போட்டி நேற்று நடைபெற்றது. டாஸ் வென்ற இங்கிலாந்து பவுலிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் களமிறங்கிய அவுஸ்திரேலியா அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 193 ரன்கள் குவித்தது. ஜேக் பிரேசர் அதிரடியாக ஆடி அரை சதமடித்து வெளியேறினார். பொறுப்புடன் ஆடிய ஜோஷ் இங்கிலிஸ் 42 ரன்னும், டிராவிஸ் ஹெட் 31 ரன்னும், மேத்யூ ஷாட் 28 ரன்னும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இங்கிலாந்து சார்பில் லிவிங்ஸ்டன், பிரிடோன் கார்ஸ் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

இதையடுத்து, 194 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரரும், கப்டனுமான பிலிப் சால்ட் 23 பந்தில் 39 ரன்கள் எடுத்து அவுட்டானார்.

பொறுப்புடன் ஆடிய லிவிங்ஸ் டன் அரை சதமடித்தார். அவர் 47 பந்தில் 87 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். ஜேக்கப் பெத்தேல் 44 ரன்கள் சேர்த்தார்.இறுதியில் இங்கிலாந்து 19 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 194 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றதுடன், ரி-20 தொடர் 1-1 என சமனிலையில் உள்ளது. (நி-6)

## கால்பந்து தகுதிப்போட்டியில் ஆர்ஜென்டினா,பிரேசில் தோல்வி




உலகக் கோப்பை கால்பந்து தொடருக்கான தகுதிப் போட்டியில் அர்ஜென்டினா, பிரேசில் அணிகள் அதிர்ச்சி தோல்வியடைந்தன.

பிபா உலகக் கோப்பை கால்பந்து தொடர் 2026 இல் அமெரிக்கா, கனடா, மெக்சிகோவில் நடக்க உள்ளன. இதற்கான தென் அமெரிக்க நாடுகளுக்கான தகுதிப் போட்டியில் 10 அணிகள் மோதுகின்றன. இதில் "டாப்-6" இடம் பெறும் அணிகள் உலக கோப்பை தொடருக்கு தகுதி பெறும்.

கொலம்பியாவில் நடந்த போட்டியில் நடப்பு உலக சாம்பியன் அர்ஜென்டினா அணி, கொலம்பியாவை சந்தித்தது. மெஸ்சி இல்லாத நிலையில் தடுமாறிய அர்ஜென்டினா அணி 1-2 என்ற கணக்கில் தோல்வியடைந்தது. தகுதிச்சுற்றில் ஆர்ஜென்டினா அடைந்த 2 ஆவது தோல்வி இது. எனினும் 8 போட்டியில் 6 இல் வென்று 18 புள்ளியுடன் முதலிடத்தில் உள்ளது.

பாராகுவேயில் நடந்த மற்றொரு போட்டியில் பிரேசில், பராகுவே மோதின. இதில் பிரேசில் அணி 0-1 என்ற கணக்கில் தோல்வியடைந்தது. கடைசி 5 போட்டியில் பிரேசில் அடைந்த நான்காவது தோல்வி இது. தற்போது பிரேசில் அணி 8 போட்டியில் 3 வெற்றி, 1 "டிரா"வுடன் 10 புள்ளி எடுத்து, 5 ஆவது இடத்தில் உள்ளது. (நி-6)

## சமூக வலைத்தளங்களில் சாதனை படைத்த றொனால்டோ



பல்வேறு சமூக வலைத்தளங்களில் ஒரு பில்லியன் ஃபாலோவர்ஸைத் தாண்டிய முதல் நபர் என்ற சாதனையை பிரபல காற்பந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ படைத்துள்ளார்.


அந்தவகையில் இன்ஸ்டாகிராமில் 639 மில்லியனுக்கும் அதிகமான ஃபாலோவர்ஸ்களையும், பேஸ்புக்கில் 170 மில்லியன் பாலோவர்ஸ்களையும், எக்ஸில் 113 மில்லியன் பாலோ வர்ஸ்களையும், யூடிப்பில் 60.5 மில்லியன் சப்ஸ்கிரைப்பர்களையும் கிறிஸ்டியானோ றொனால்டோ தன்வசம் தக்கவைத்துள்ளார்.

றொனால்டோவின் இந்த சாதனை, அவரது காற்பந்து சாதனைகளுக்கு அப்பாற்பட்டது. அவரது சமூக ஊடக இருப்பு உலகெங்கிலும் உள்ள ரசிகர்களுடன் இணைவதற்கும் அவரது தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் பயிற்சி நடைமுறைகள் பற்றிய நுண்ணறிவைப் பகிர்ந்து கொள்வதற்கும் உதவுகின்றது.

90 நிமிடங்களுக்குள் ஒரு மில்லியனுக்கும் அதிகமான சப்ஸ்கிரைப்பர்களை பெற்ற அவரது யூடியுப் சேனல், சமூக ஊடகத் தளத்தில் அவரது ஆதிக்கத்தை அண்மையில் வெளிக்காட்டியிருந்தது.

இது குறித்து எக்ஸில் ஒரு பதிவிட்டுள்ள றொனால்டோ, சமூக தளங்களில் தன்னைப் பின்தொடர்பவர்களின் அசைக்க முடியாத ஆதரவு மற்றும் நம்பிக்கைக்கும் நன்றி தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### பரீட்சை நிறைவடைந்ததும்

# குழந்தைப் பருவத்தை மீண்டும் அவர்களுக்கு வழங்குங்கள்!

### விசேட வைத்திய நிபுணர் வேண்டுகோள்

(கொழும்பு)

**5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை முடிவடைந்ததும் மாணவர்களை சுதந்திரமாக நடமாட விடுமாறு விசேட வைத்திய நிபுணர் ரூமி ரூபன் பெற்றோர்களிடம் கோரிக்கைவிடுத்துள்ளார்.**

புலமைப்பரிசில் பரீட்சைக்கு முன்னரும் பின்னரும் தங்களது பிள்ளைகளை ஏனைய பிள்ளைகளுடன் ஒப்பிடுவதை தவிர்க்குமாறும் பெற்றோர்களிடம் விசேட வைத்திய நிபுணர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த சில மாதங்களாக புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாரான மாணவர்கள் அதிக மன அழுத்தத்தில் இருந்ததாகவும், இனி மாணவர்கள் மீது அழுத்தம் கொடுக்க வேண்டாம் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

பரீட்சை எழுதிய பின், பரீட்சை வினாத்தாளை மீண்டும் மாணவர்களிடம் கொடுத்து, அவர்களை எழுத வைத்து, விடைகள் சரியாக உள்ளதா என சோதித்து பார்ப்பதில் பலனில்லை.

புலமைப்பரிசில் பரீட்சை என்பது மாணவர்களின் வாழ்வில் சந்திக்கும் இடையூறுகளில் ஒன்று. வாழ்க்கையில் இது போன்ற அனுபவங்கள் இன்னும் அதிகமாக இருக்கும். மாணவர்களின் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுக்கு கூறி அவர்களை பலப்படுத்த வேண்டும்.

மேலும், புலமைப்பரிசில் பரீட்சை காலத்தில் மாணவர்கள் இழந்த தங்களது குழந்தைப் பருவத்தை மீண்டும் அவர்களுக்கு வழங்குங்கள் என விசேட வைத்திய நிபுணர் ரூமி ரூபன் பெற்றோர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார். (நி-6)

---

# 3 லட்சத்து 23,879 பரீட்சார்த்திகள் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்

### பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவிப்பு

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது"

இந்த ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு 3 இலட்சத்து 23,879 பரீட்சார்த்திகள் தகுதி பெற்றுள்ளதுடன், அவர்கள் நாடளாவிய ரீதியில் 2,849 பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். விசேட தேவையுடைய மாணவர்களுக்காக 7 பரீட்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

மஹரகம வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வரும் சிறுவர்கள் அங்கிருந்து பரீட்சைக்கு தோற்றுவதற்காக பரீட்சை நிலையமொன்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இரண்டு பகுதிகளைக் கொண்ட புலமைப்பரிசில் பரீட்சையின் இரண்டாம் பகுதி வினாத்தாள் முதலில் வழங்கப்படும்.இது காலை 9.30 முதல் 10.45 வரை நடைபெறும். அதன் பின் முதலாம் பகுதி வினாத்தாள் காலை 11.15 மணிக்கு ஆரம்பமாகி ஒரு மணி நேரம் இடம்பெறும். மாணவர்கள் பேனா பயன்படுத்துவார்களாயின் கறுப்பு அல்லது நீலப் பேனாவையே பயன்படுத்த முடியும்.

வேறு வண்ண பேனாக்களை பயன்படுத்த அனுமதி இல்லை. ஆனால் பென்சிலால் எழுதினால் அதற்கு எந்தத் தடையும் இல்லை. அழிப்பான், அடிமட்டம், தண்ணீர் போத்தல் ஆகியவற்றை பரீட்சை மண்டபத்திற்கு எடுத்துச் செல்ல முடியும். எனினும், கோப்பு அட்டைகள் மற்றும் ஸ்மார்ட் கைக் கடிகாரங்களுக்கு அனுமதியில்லை" இவ்வாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். (நி-6)




அரசியல்வாதிகளாலும் சகபாடிகளாலும் திருடப்பட்ட சொத்துக்களை மீளக் கையகப்படுத்திக் கொள்வதற்காக அரச ஆதனங்கள் மீள் நிறுவுகைக்கான நிறுவனமொன்று நிறுவப்படுவதோடு நிதிசார் குற்றச்செயல்கள், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய வழக்குகளை துரிதமாக தீர்த்து வைப்பதற்கான நிரந்தர மூவரடங்கிய மேல்நீதிமன்றமொன்று தாபிக்கப்படல்.

அனைத்துப் பிரஜைகளுக்கும் தமது மொழியில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளத் தக்கவகையிலான தேசிய மொழிகள் கொள்கையொன்று.

கல்வி மற்றும் தொழில்வாய்ப்புகளை அரசியல் அழுத்தங்களின்றி தேசியத்துவத்திற்கு நியாயம் ஈடேறக்கூடியவகையில் தகைமைகளுக்கிணங்க வழங்குதல்.

ஒன்றிணைவோம்

எங்கள் தோழர் அநுர

අනුර කුමාර දිසානායක
அநுர குமார திசாநாயக்க
Anura Kumara Dissanayake

(சி-019)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு கிழக்கிற்கு

# பொலிஸ், காணி அதிகாரம் வழங்க தயாரில்லை

## சரத் பொன்சேகா

(கொழும்பு)

நான் ஜனாதிபதியானால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குப் பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் வழங்க மாட்டேன் என ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கை, இந்திய ஒப்பந்தத்துக்கு தெற்கு மக்களின் ஆசிர்வாதம் இருக்க வில்லை. அது பலவந்தமாகத் திணிக் கப்பட்டதொன்றாகும்.

அதனால்தான் வடக்கு - கிழக்கு இணைப்பு, பொலிஸ் மற்றும் காணி அதிகார்ம் என்பன நடைமுறைப்படுத் தப்படவில்லை.

குறித்த ஒப்பந்தம் அமுலாக்கப்பட்ட விதத்தை நானும் அனுமதிக்கவில்லை. ஒப்பந்தம் வந்தபோது நான் இராணுவத்தில் இருந்தேன். ஒப்பந்தம் பலவந்தமாகத் திணிக்கப்பட்டதை ஏற்க முடியாது.

ஒற்றையாட்சி எனும் நிலைப்பாட்டி லேயே நான் உள்ளேன்.

நான் ஜனாதிபதியாகும் பட்சத்தில் மாகாணங்களுக்குப் பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கமாட் டேன்.

ஆனால், 13 ஐ விடவும் அதிகாரங் களைப் பகிர்ந்து மக்கள் சமத்துவத்துடன் வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக் கலாம். அவ்வாறானதொரு நிலை ஏற்படும் வரை மேற்படி அதிகாரங்களை வழங்க முடியாது எனவும் தெரிவித் தார். (நி-6)

# திருகோணமலை ஆயரை சந்தித்தார் அரியநேத்திரன்



(திருமலை)

தமிழ் பொது வேட்பாளர் அரியநேத் திரன் நேற்று திருகோணமலை மாவட்டத்திற்கு வருகை தந்திருந்த நிலையில் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயல் இம்மானுவல் ஆண்டகையுடன் விசேட சந்திப்பொன்று ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் இம்முறை ஜனாதிபதி தேர்தல் தொடர்பான நிலவரங்கள் குறித்தும் திரு கோணமலை மாவட்டத்தின் பொது மக்களது நிலைப்பாடு குறித்தும் கலந்து ரையாடப்பட்டது. (நி-6)


## வீடு வாடகைக்கு

தாவடி சந்திக்கருகாமையில்
Tile பதித்த வீடு
வாடகைக்குண்டு

தொடர்புகளுக்கு:
076 570 4141
(அ-2435)


## யாழ்ப்பாணம் அரியாலை அம்மா முதியோர் காப்பகம்

முதியோர், நோயாளிகள், படுக்கை நோயாளிகள், ஞாபக மறதி, படுக்கைபுண், பக்கவாதம், பிறப்பில் இயலாமை அனைவரையும் குறைந்த செலவில் அரச வைத்தியர்களின் ஆலோசனையுடன் பராமரிக்கப்படும்

தொடர்புகளுக்கு:Dr.077 712 6859
(அ-2434)


# மரண அறிவித்தல்

தோற்றம்
15
-
08
-
1945



மறைவு
11
-
09
-
2024

## இராசையா பாலசிங்கம்

(ஓய்வுநிலை தாதிய உத்தியோகத்தர் யாழ்/போதனா வைத்தியசாலை)

வேலன்குளத்தைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மத்தி நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பாலசிங்கம் அவர்கள் கடந்த (11.09.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பையா-கண்ணகை தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன்மணி அவர்களின் பாசமிகு கணவரும், தயாளன், குணாளன், தயாபரன், பத்மராணி, லோகராணி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், அமரர். தவராசா, தெய்வேந்திரம்பிள்ளை, தனலட்சுமி, சறோஜா, சிவானந்தம், அமரர்.தனபாலசிங்கம், கோணேசமூர்த்தி, மனோரஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பகீரதன்(கதிரியியலாளர்- யாழ்/போதனா வைத்தியசாலை), அமரர். பிரதீபா சுதர்சன் (இத்தாலி), வசீகரன், கிரிதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், யாழினி (ஆசிரியர் யாழ்/ ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ.க.ம. வித்தியாலயம்), ஜெயராசலிங்கம், வித்தியா, நிறைஞ்சனா, அபிராணி ஆகியோரின் மாமனாரும், அகர்ஷன், சாய்சரண், அக்ஷரா, கியூஷா, அனுஷ், லபினாஷ், ஹர்ஷிதா, லதனியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.09.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீவியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(1941)

தகவல் :
குடும்பத்தினர்.

# இராசிபலன்

15.09.2024
ஆவணி 30, ஞாயிற்றுக்கிழமை
துவாதசி பிற்பகல் 3.27 மணிவரை
திருவோணம் பிற்பகல் 3.27 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணி வரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை
பிரதோச விரதம்
சந்திராஷ்டமம்-
மிருகசீரிடம், திருவாதிரை

வளவன்

**மேஷம்** வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், செயற்பாடுகளில் உற்சா கம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொலை பேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**ரிஷபம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆன் றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தில் நிலவிவந்த குழப்பங்கள் தீரும், புதிய முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்** எந்தக் காரியத்தையும் நிதானமாகச் செய்வது நல்லது, விரயங்கள் மேலோங்கும் நாள், கவலைகள் தீர கண் ணனை வழிபட வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலை யிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**கடகம்** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம்.

**சிம்மம்** எதிர்ப்பாக இருந்தவர் கள் மனம் மாறுவர், சிக்கனத்தைக் கடைப் பிடிக்கும் எண்ணம் உருவாகும், உற்சாகமான நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டு வீர்கள்.

**கன்னி** நீண்ட நாட்களால் தள் ளிப் போட்டுவந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், மனநிறைவு கூடும் நாள், புண்ணிய காரியங்க ளில் ஆர்வம் கூடும்.

**துலாம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படையும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெற லாம், பொழுதுபோக்கு விடயங்க ளில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு

**விருச்சிகம்** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், வளர்ச்சி கூடும் நாள், உடன் பிறப்புகள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர்

**தனுசு** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு, நாவன் மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப்பு ழக்கம் அதிகரிக்கும் நாள், குடும்பத் தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற் கான வாய்ப்புண்டு.

**மகரம்** தொட்ட காரியங்களில் வெற்றி பெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ஆரம் பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய விடயம் முடிவில் ஆதாயத்தை கொடுக்கலாம்.

**கும்பம்** சாப்பிடக் கூட நேரமில் லாமல் சில வேலைக ளைச் செய்வீர்கள், மாற் றங்களால் ஏற்றமுண்டு, உறவினர்களின் சந்திப்பால் திடீர் விரயங்கள் ஏற்படலாம்.

**மீனம்** நீண்ட நாளைய விருப்ப மொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பொரு ளாதார நிலையில் முன் னேற்றம் காணும் நாள், பயணங்கள் போட்ட திட்டங்கள் கைகூடும்.

கேட்டதையெல்லாம் நம்பாதே நம்பியதையெல்லாம் சொல்லாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். அத்தியடி ஸ்ரீசிதம்பர நடராஜ வீரகத்தி பிள்ளையார் கோயில்

### பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

மேற்படி பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை ஆலய கணபதி கலாசார மண்டபத்தில் மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.

சகல பொதுமக்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
செயலாளர்,
நிர்வாக சபை.

(1926)


**மணமகள் தேவை**

1993, இந்து, ரோகிணி, ENGINEER
பூர்வீகம்-உடுவில், வதியுமிடம்-கொழும்பு
மணமகன் பதிவு இல: 10893
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401
(சி-2433)

**மணமகள் தேவை**

1990, இந்து, திருவோணம், DOCTOR,
பூர்வீகம்-வட்டுக்கோட்டை, வதியுமிடம்-
LONDON, மணமகன் பதிவு இல: 10983
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401
(சி-2433)

**மணமகன் தேவை**

1996, இந்து, சித்திரை, DOCTOR,
பூர்வீகம்-பருத்தித்துறை, வதியுமிடம்-அல்வாய்
மணமகள் பதிவு இல: 10083.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401
(சி-2433)

**மணமகன் தேவை**

1995, இந்து, பூசம், CIVIL ENGINEER,
பூர்வீகம்-யாழ்ப்பாணம், வதியுமிடம்-
AUSTRALIA மணமகள் பதிவு இல: 10973
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை மட்டுமே
அழையுங்கள் 076 664 9401
(சி-2433)




## உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்

**16.09.2024**

உமையவள்தன் பாலகனார் தேரிலேறி
உரும்பைநகர் வீதிவாரார் பாரும்பாரும்
பரத்தைப்புலக் கருணாகரன் தேரிலேறி
சிக்கலெல்லம் சீக்கிரமாய் தீரச் செய்து
செல்வமொடு செல்வாக்கு மருளூவாய்
கலையான்மிளிர் உரும்பைநகர் கருணாகரக கணபதியே

**சரித்திரப் பிரசித்தி பெற்ற உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலின் இவ்வாண்டுக்கான மஹோற்சவ வரிசையில் நாளை**

16.09.2024 திங்கட்கிழமை எல்லாம் வல்ல

### கருணாகரப்பிள்ளையாரின் தேர்த்திருவிழா

வெகுசிறப்பாக இடம்பெறவுள்ளது.

நாளை காலை 8.00 மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டபப் பூசையை அடுத்து எம்பெருமான் சித்திரத் தேரில் எழுந்தருளி வீதியுலா வந்து அடியார்களுக்கு நல்லருள் பாலிக்கவுள்ளார். நாளைய தேர் உற்சவத்தில் ஈழத்துப் புகழ்பூத்த பல தவில், நாதஸ்வரக் கலைஞர்கள் கலந்து கொண்டு எம்பெருமானுக்கு இசை ஆராதனை செய்வார்கள். கருணாகரப் பெருமானின் அடியவர்கள் தேர் உற்சவத்திலும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்து கொண்டு எம்பெருமானின் திருவருட்கடாட்சம் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.

**தேர்த்திருவிழா உபயகாரர்கள்**

(1927)


# வெல்க தமிழ்

## சங்கு எங்கள் சின்னம்

எமது அரசியல் அபிலாஷைகள்
ஒரே குரலாய் ஓங்கி ஒலித்திட
**கட்சிகளைக் கடந்து**
தமிழ் இனமாகச் சிந்திப்போம்!






# பா.அரியநேத்திரன்

## தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு

(சி-022)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரில் ஆரோகணித்த துர்க்காதேவி





தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று சனிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. இதன்போது பக்தர்கள், அங்கப்பிரதஷ்ணம், காவடிகள், கற்பூரச்சட்டிகள் எடுத்து தமது நேர்த்திக் கடன்களில் ஈடுபட்டிருந்தனர். (நி-6-33)

# மன்னாரில் இடம்பெற்ற கலாசார விழா



(மன்னார்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மன்னார் பிரதேச செயலகமும், கலாசார பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த மன்னார் பிரதேச கலாசார விழா நேற்று முன்தினம் மாலை மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் நகர பிரதேச செயலாளர் மனோகரன் பிரதீப், தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் சர்வமத தலைவர்கள் கலந்து கொண்டதோடு, பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் விருந்தினர்களாக மேலதிக மாவட்ட செயலாளர் (நிர்வாகம்) ய.பரந்தாமன், மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) மா.சிறிஸ்கந்தகுமார், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதி பணிப்பாளர் திருமதி.லாஹினி நிருபராஜ், மன்னார் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் அ.மரின் குமார், கலாபூசனம் ஜோண் பொஸ்கோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது மாவட்டச் செயலகத்திற்கு முன் விருந்தினர்கள் கலாசார பேரணி ஊடாக மன்னார் நகர சபை மண்டபம் வரை மங்கள வாத்திய இசையுடன் அழைத்து வந்தனர். பின் நகரசபை மண்டபத்தில் கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதோடு, பரிசளிப்பு நிகழ்வு, மற்றும் கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-285)

# பல்கலை பொன்விழாவை முன்னிட்டு மருத்துவ முகாம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பொன்விழாவை முன்னிட்டு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் மருத்துவ மாணவர்களின் பங்களிப்பில் உயிர்நாடி-இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி - நண்பகல் 12 மணிவரை முல்லைத்தீவு தெனியன் குளம் அ.த.க பாடசாலையில் இடம் பெறும்.

இதன்போது பற்சோதனை, கண்பரிசோதனை, குருதியமுக்கம், உயரத்திற்குகேற்ற உடல் நிறை, குருதியில் சீனியின் அளவு, குருதிச் சோகை, தைரொயிட்டு பரிசோதனை, பிற தொற்றா நோய்கள் மற்றும் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கிவைக்கப்படவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6-33)




யா/இராமநாதன் கல்லூரியின் 110 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு அண்மையில் நடைபவனி ஒன்று இணுவில் கந்தசுவாமி கோயில் முன்பாக ஆரம்பமாகி இராமநாதன் கல்லூரி வரை நடைபெற்றிருந்தது.



பாஷையூர் பங்குத்திருச்சபையினால் கத்தோலிக்க இளையோர் ஒன்றிய வாரம் பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில் அதனை முன்னிட்டு நேற்று முன்தினம் மாலை நற்கருணை பவனி இடம்பெற்றது.

புனித அந்தோனியார் ஆலயத்திலிருந்து ஆரம்பமான நற்கருணை பவனி கொழும்புத்துறை மகேந்திரபுரம் மற்றும் பாஷையூர் வீதிகள் ஊடாக வலம் வந்து இறுதியில் நற்கருணை ஆசீருடன் நிறைவுபெற்றது. (படம்:சிவசாந்தன்)

# தமிழ் பொது வேட்பாளருக்கு நெல்லியடி வாணிபர் கழகம் ஆதரவு

(கரணவாய்)

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவாக சங்கு சின்னத்துக்கு வாக்களித்து தமிழர்களாக எமது ஒற்றுமையை உலகிற்கு உணர்த்துவோம் என நெல்லியடி வாணிபர் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு நெல்லியடி மத்திய சந்தைக்கு அருகாமையில் நேற்று காலை 10 மணிக்கு அந்தக் கழகத்தின் இரா.மயூதரன் தலைமையில் இடம்பெற்ற "நமக்காக நாம்" பரப்புரை கூட்டத்தின் போது இவ் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி நகர் பகுதி வர்த்தகர்கள், அயல் பகுதி மக்களிடையே தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவாக சங்கு சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டிய அவசியம் குறித்து இடம் பெற்ற பரப்புரை கூட்டத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பைச் சேர்ந்த செல்வின் இரணியேஸ் மரியாம்பிள்ளை, புலம்பெயர் செயற்பாட்டாளர் பீற்றர், நெல்லியடி வாணிபர் கழக நிர்வாகிகள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

சிதறுண்டு போயுள்ள நாம் ஓரணியல் ஒன்றுசேர்ந்து எமது ஒற்றுமையை உலகிற்கு காட்டுவதற்கு இந்த சந்தர்ப்பத்தினை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் தமிழ்ப் பொது வேட்பாளராக போட்டியிடும் பா.அரியநேத்திரனுக்கு நெல்லியடி வாணிபர் கழகமாக எமது பூரண ஆதரவினை வழங்குவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம் என தெரிவித்துள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 459
Viber 076 636 3378



# தமிழரசுக் கட்சியும் உடைக்கப்பட்டது!

**"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூடிக் கலந்தாலோசித்ததன்படி தமிழரசுக் கட்சியின் ஆதரவு ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவிற்கு என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன் தெரிவித்திருந்தார். இந்த முடிவு தமிழ் மக்களினால் எதிர்பார்க்கப்பட்ட முடிவு என்பதனால் அது சாதாரண முடிவாக கடந்து போனது."**

தமிழினம் பாவப்பட்ட இனம். கடந்த பிறப்பில் தமிழினம் கொடும் பாவம் செய்திருக்க வேண்டும். அதனால் தான் என்னவோ இந்தப் பிறவியில் அது மிகக் கொடும் வேதனைகளையும், இழப்புக்களையும், துரோகத்தனங்களையும் நம்ப வைத்துக் கழுத்தறுக்கும் செயற்பாடுகளையும் எதிர்கொண்டுள்ளது.

நான் சிறுவனாக இருக்கும் போது தமிழினத்தைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலைவர் தந்தை செல்வா கூறியதைக் கேட்டு வியப்படைந்தேன்.

ஏன் இவர் இவ்வாறு கூறுகிறார். தமிழினத்தின் உரிமைகளைப் பெற்றுத் தர அர்ப்பணிப்புடன் அறவளிப் போரைக் மேற்கொண்டவர் தந்தை செல்வா. அவரே இவ்வாறு கூறுவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

காலத் தொடர்ச்சி தமிழ் இளைஞர்கள் தமிழினத்தின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள ஆயுதப் போரைத் தொடங்கினர். அதை ஒட்டு மொத்த தமிழினமும் ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு தமது முழுமையான ஆதரவைக் கொடுத்தனர்.

அப்போது என் மனம் அடடா பெரும் தலைவர் தந்தை செல்வா ஏன் இவ்வாறு கூறினார். அவரின் வாக்குப் பொய்த்து விட்டதே.

தமிழினத்தைக் காக்க எமது இளைஞர்கள் தமது இன் உயிர்களைத் துச்சமென மதித்து தியாகம் செய்கிறார்களே. இவர்கள் நிச்சயம் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுத் தந்து, தமிழினம் சுய நிர்ணய உரிமைகளுடன், வாழவைப் பார்கள் என்று பலமாய் நம்பினேன்.

முடிவு வேறு மாதிரியானது. 2009 வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த இறுதி யுத்தத்துடன் அந்த நம்பிக்கையும் தவிடு பொடியாகிப் போக, மீண்டும் தந்தை செல்வாவின் வாக்கு பலித்துவிடுமோ என்ற பயம் என்னை ஆட்கொண்டது. அந்தப் பயம் இன்றுவரை எனக்குள் உருவெடுத்துக் கொண்டே இருக்கிறது.

பயங் கரவாதத்தை அழிப்பதாய்க் கூறப்பட்ட போரில் அழிந்து போனது அப்பாவிப் பொது மக்கள் என்ற உண்மை சர்வதேசம் வரை சென்றும் அது தொடர்பில் எவரும் கரிசனை காட்டுவதாய்த் தெரிய வில்லை.

தமிழினத்துக்கு மட்டும் தான் இன் நிலையா? என்று தேடினால்; அல்ல; உலகில் வாழும் ஒட்டு மொத்த சிறு பான்மை இனங்களுக்கும் இன் நிலையே.

சர்வதேச நாடுகள் தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்வதற்காகப் போடும் மர்ம முடிச்சுக்களே ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டுவரப்படும் பிரேரணைகள்.

இந்த முடிச்சுக்கள் பார்ப்பதற்கு இறுகும் உண்மை முடிச்சுக்களாக திரிவுபடுத்தப் பட்டாலும் அது கால நீட்சியில் மர்மமாக மறைந்து போவதை எவராலும் தடுத்து விட முடியாது.

இந்த மர்ம முடிச்சுக்களை தமிழினம் பலமாய் நம்பியது. அந்த நம்பிக்கை இற்றைவரை நம்பிக்கையாக இருப்பதென்பது மிகப் பெரும் கொடுமை.

இந்த மர்ம முடிச்சுக்களை தோற்றுவித்ததற்கும் அவற்றை உண்மை முடிச்சுக்களாக காட்டியதற்கும் எமது தமிழ் தலைவர்கள் முழுக் காரணம் எனலாம்.

பேச வேண்டிய இடத்தில் பேசாமல் இருப்பதும், கேட்க வேண்டிய விடயங்களை குரல் உயர்த்திக் கேட்காமலும் விட்டதன் விளைவு தமிழினம் இன்று கந்தறுந்து நிற்கிறது.

தேர்தலையும் பதவிகளையும் இலக்காகக் கொண்டு செயற்பட்டதல்லாது இவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளையோ, அவர்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்ற சிந்தனையையோ கொண்டிருக்கவில்லை என்பது நூறு விகிதம் உண்மையானது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒற்றுமையின் சின்னம் 2009 இற்குப் பின்னர் அஸ்தமிக்கத் தொடங்கியது. அந்த அஸ்தமனம் தமிழரசுக் கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகி, தனிவளி செல்லத் தலைப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் குறித்த முடிவை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆயினும் தமிழ் மக்களின் விருப்பு, வெறுப்பை கருத்தில் எடுக்காத தமிழரசுக் கட்சி தனது தனி வழியைத் தொடரவே செய்தது.

தமிழரசின் தனிவழிப் பயணம் சொற்ப தூரம் செல்லுமுன்னமே தலைமைப் பிரச்சினை எழ, அது நீதிமன்றம் வரை சென்று இன்றுவரை தலைமைப் பிணக்குத் தீர்க்கப்படாத பிரச்சினையாய் வியாபித்து, அணி பிரிந்து, பழி தீர்க்கும் களமாய்க் காட்சி தருகிறது.

2024 ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்புகள் வெளி வந்ததும் தமிழினத்தின் ஒற்றுமையைப் பறை சாற்றவும். தொடர்ந்து பெரும்பான்மை வேட்பாளர்களின் வாக்குறுதிகளை நம்பி ஏமாறாமலும் எம் ஒற்றுமையைக் குவிக்கும் செயற்றிட்டமாய் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கப்பட்டார்.

குறித்த தமிழ் பொது வேட்பாளருக்கு பல்வேறு கட்சிகள், பொது அமைப்புகள் ஆதரவு தெரிவித்திருந்த போதிலும் தமிழரசுக் கட்சி தனது ஆதரவைத் தெரிவிக்காமல் காலம் கடத்தியது.

இக் காலம் கடத்தலிலேயே தமிழரசுக் கட்சி தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கப்போவதில்லை என்ற தெளிவிற்கு தமிழ் மக்கள் வந்துவிட்ட நிலையில், தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கட்சியின் முடிவு எப்படி அமையப் போகிறது என எனக்குத் தெரியாது. ஆனால் எனது ஆதரவு தமிழ் பொது வேட்பாளருக்கே என தனது தனிப்பட்ட முடிவைக் கூறியிருந்தார்.

இந்த நிலையிலேயே அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த தமிழரசுக் கட்சியின் தீர்மானம் வெளிவந்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூடிக் கலந்தாலோசித்ததன் பேரில் தமிழரசுக் கட்சியின் ஆதரவு ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவிற்கு என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எ. சுமந்திரன் தெரிவித்திருந்தார். இந்த முடிவு தமிழ் மக்களினால் எதிர்பார்க்கப்பட்ட முடிவு என்பதனால் அது சாதாரணமான முடிவாக கடந்து போனது. இவ்வாறான சூழ்நிலையில் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவைச் சந்தித்துக் கலந்துரையாடியமை பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. ஏலவே சஜித்தை தமிழரசுக் கட்சி ஆதரிப்பதை கடுமையாக எதிர்த்திருந்தார் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்.



ரணில்- மாவை சந்திப்பின் உள்ளார்ந்த அர்த்தம் என்ன என்பதை புட்டுக் காட்ட வேண்டிய தேவை இல்லையாயினும், அச் சந்திப்பினூடாக தமிழரசுக் கட்சியின் முடிவு எப்பேற்பட்ட முடிவு, எவரால் எடுக்கப்பட்ட முடிவு என்கின்ற கேள்விகளுக்கு விடைதந்திருக்கிறது.

இங்கு தான் நாம் ஒரு விடயத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

- தமிழினத்தின் உரிமை மீட்புப் போருக்காய் தம்மை முழுமையாய் அர்ப்பணித்த ஒரு கட்டமைப்பு மிக்க அமைப்பை உடைத்தெறிந்த துரோகத்தனம்.
- நல்லாட்சி அரசு காலத்தில் போர்க் குற்ற மீறல் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை விடுத்த போது இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்குங்கள் என பரிந்துரைத்த தமிழ்த் தலைமையின் அரசியல் சாணக்கியம்.
- தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்கின்ற ஒரு குடையை உடைத்து தமிழரசுக் கட்சி தனி வழி செல் லச் செய்த அரசியல் நுட்பம்.
- தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவி விடயத்தை நீதிமன்றம் வரை கொண்டு சென்று அதன் ஸ்திரத் தன்மையினை தகர்த்த பெருமை.
- மாவை சேனாதிராசா, எம்.எ. சுமந் திரன், சிறிதரன் என தமிழரசுக் கட்சியினரே பிரிந்து நிற்கும் படு பயங்கரமான நிலை.

இவை அனைத்தும் எங்கோ கட்டமைக்கப்பட்ட ஒரு விடயம் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

இப்போது தீர்க்கதரிசி தந்தை செல்வாவின் ஞானத்தை நினைத்து நான் வியந்து நிற்கின்றேன்.

"தமிழினத்தைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்"

-அபிமன்யு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



தாவீது பேரின்பநாதன்



கனகசபாபதி நமநாதன்

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். வலம்புரி பத்திரிகை அலுவலகத்தில் அர்ப்பணிப்போடு சேவையாற்றிய தாவீது பேரின்பநாதன் (டேவிற் வீதி, யாழ்ப்பாணம்) அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம்.

இலங்கை மின்சார சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்ற பேரின்பநாதன் தனது கடமையில் மிகவும் நேர்த்தியானவர். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் எழுந்தார். திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைத் தலைவராக இருந்த சட்டத்தரணி கனகசபாபதி நமநாதன் (திருநெல்வேலி) அவர்கள் காலமான செய்தியறிந்து துயரடைகின்றோம்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர், சுதந்திரத்திற் குப் பின்னர் இலங்கையின் அரசியலமைப்பு என்ற நூலை வெளியிட்டவர் சட்டத்தரணி நமநாதன். அவரின் ஆத்மா சாந்திக்காக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, மீண்டும் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:-** அதுசரி, ஜனாதிபதித் தேர்தல் எப்படி இருக்குது. யாருக்கு வெற்றி வாய்ப்பாம்.

**மூப்பர்:-** ஜனாதிபதித் தேர்தலில் ஆரு வெல்லுகினம் என்பதற்கு முதல் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோட தமிழரசுக் கட்சி இரண்டாகப் பிளவு படக் கூடிய வாய்ப்பு இருக்குதெண்டு தான் நான் நினைக்கிறன்.

**விதானையார்:-** இரண்டாகவோ... மூன்றாகவோ...

**கங்காணி:-** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:-** சுமந்திரன், சிறீதரன், மாவை என மூன்று அணியல்லோ இருக்குது.

**பண்டிதர்:-** மாவை யாருக்கு இப்ப வந்த துணிவு அப்ப வந்திருந்தால் நல்லா இருந்திருக்கும்.

**வாத்தியார்:-** நடக்கப் போற தேர்தலில ஒரு சிங்களவர் தான் ஜனாதிபதியாக வரப்போறார்.

ஆனால் நாங்கள் இஞ்ச குத்தி முறிஞ்சு கட்சியை உடைக்கப் போறம்.

**சாத்திரியார்:-** தமிழ் மக்களுக்கு ஏதுவும் தெரியாது எண்டு தமிழ் அரசியல்வாதிகள் நினைக்கினம்.

அதால தாங்கள் தாங்கள் நினைச்சபடி நடக்கினம்.

எல்லாத்திற்கும் எங்கட சனங்கள் பாடம் புகட்டுவினம்.

**சிறாப்பர்:-** சாத்திரியார் நீங்கள் நினைக்கிற மாதிரி எங்கட சனங்கள் பாடம் படிப்பிக்கமாட்டினம். அடுத்த பொதுத் தேர்தலில பாருங்க பிறகும் எங்கட சனங்கள் உவையளுக்குத்தான் வாக்களிப்பினம்.

**கங்காணி:-** சிறாப்பர் அதோட எங்களிட்ட இளம் தலைமுறை அரசியலும் இல்லைத் தானே.

அப்படி ஆரேனும் இளைஞர்கள் அரசியலில விரும்பி வருகினம் எண்டால், அவையளும் [illegible] யில தானே குதிக்கினம்.

**மூப்பர்:-** சிறாப்பர் சொல்லுறது உண்மை தான். அண்மையில ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது, மாவிட்டபுரத்தில உள்ள மாவை சேனாதிராஜாவின்ர வீட்டிற்குச் சென்று அவரைச் சந்தித்தவர்.

அங்க மாவை, ஜனாதிபதியை பார்த்து; அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேணும். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேணும்.

தமிழர் பகுதியை அபிவிருத்தி செய்ய வேணும் எண்டெல்லாம் கோரிக்கை முன்வைத்தார்.

அவர் வைத்த கோரிக்கையை பார்த்த போது அடக்கடவுளே! தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே இருக்குது.

தேர்தலில ரணில் வெல்லுவாரோ தோற்பாரோ எண்டு தெரியாமல் இருக்கிற இந்த நேரத்தில போய், இந்தக் கோரிக்கையை நாங்கள் முன்வைக்கிறம் எண்டால் எங்கட அரசியல் ஞானம் எப்படி இருக்குது எண்டு பாருங்களன்.

**சாத்திரியார்:-** நீங்கள் இதைச் சொல்லுறியள் எங்கட ரவிராஜின்ர மனைவியும் இன்னும் சிலரும் சேர்ந்து போய் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து சில கோரிக்கைகளை முன்வைத்தவியளாம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி சஜித்பிறேமதாசவுக்கு ஆதரவு எண்டு அறிவிக்குது.

அதேநேரம் தமிழரசுக் கட்சியில இருக்கிற இன்னொரு தரப்பு, ரணில் விக்கிரம சிங்கவைச் சந்திக்குது எண்டால், இங்க என்ன நடக்குது எண்டு ஒருக்காச் சிந்தித்துப் பாருங்களன்.

**வாத்தியார்:-** ஒவ்வொரு தமிழ் அரசியல்வாதிகளும் தத்தம் நலனை முன் வைத்து காய் நகர்த்துகினம்.

ஆனால் என்னைப் பொறுத்த வரை இயற்கை அவர்களுக்கு உரிய பாடம் புகட்டும். அவ்வளவு தான்.

இவ்வாறு வாத்தியார் கூறியதும் ஆலடி நிசப்தமாகியது. நிசப்தத்தைக் கலைக்க, சிறாப்பர் கனகசபை குரல்கொடுத்தார்.

**சிறாப்பர்:-** அது சரி, வடக்கு மாகாணத்தின்ர தமிழ்த் தினப் போட்டிகள் அண்மையில சாவகச்சேரியில நடந்ததாம்.

அதில பொருத்தமற்றவர்களை நடுவர்களாக நியமித்ததால போட்டி முடிவுகள் தலைகீழாக வந்திட்டுது எண்டு போட்டியில கலந்து கொண்ட பாடசாலை மாணவர்களும் பொறுப் பாசிரியர்களும் விசனம் அடைஞ்சிருக்கினம்.

**பண்டிதர்:-** நானும் இதுபற்றிக் கேள்விப் பட்டனான்.

ஒரு குறிப்பிட்ட போட்டியில நடுவராக இருந்த ஒருவர் போட்டி நடந்து கொண்டிருக்கும் போது நித்திரையாகிப் போனாராம். பிறகு ஏற்பாட்டாளர்கள் வந்து, அந்த நடுவரை ஒருக்கா முகத்திற்கு தண்ணி தெளிச்சுப் போட்டுவாங்க எண்டு அனுப்பினவியள் எண்டு அறிஞ்சன்.

அதோட இன்னொரு நடுவர், குறித்த பாடசாலை மாணவர்களிட்ட; ஒவ்வாரு வருடமும் வெல்லுற நீங்கள் இந்தமுறை விட்டுக் கொடுத்தால் என்ன எண்டும் கேட்டவராம்.

இந்த விவகாரம் இப்ப சூடு பிடித்து வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டு போறதுக்கு முடிவு செய்திருப்பதாகக் கேள்வி.


இவ்வாறு பண்டிதர் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## அங்க ஜனாதிபதித் தேர்தல் முடிய இஞ்ச பல கட்சிகள் உதயமாகும்


ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் சிலருக்கு பொது வேட்பாளரில் உடன்பாடு இல்லையே வியாசரே?




வியாசரின் ஓட்டு யாருக்கு என்று தெரிந்து கொள்ளலாமா?

**விக்னேஸ் — மாதகல்**

**ஜோக் ஒன்று கூற முடியுமா வியாசரே?**

இந்த உலகத்தில் இரண்டு பேரை ரொம்ப நேரம் முறைத்துப் பார்க்க முடியாது. ஒன்று சூரியன். இரண்டாவது மனைவி.

**ஈஸ்வரன் — உரும்பிராய்**

**எதிர்காலத்தில் மாகாணசபை அமையுமா வியாசரே?**

எமக்கு சுயாட்சி வேண்டும் என்று மூச்சு முட்டக் கத்துகின்றோம். எம்மிடம் சுயாட்சி தந்தால் அதன் வினைத்திறன் பூச்சியத்தில் தான் இருக்கும் என்பது தான் கசப்பான உண்மை.

ஏனென்றால் எம்மிடம் ஒற்றுமை இல்லை. ஆளுமையில்லை. அர்ப்பணிப்புத்தன்மை இல்லை. தலைமைத்துவம் இல்லை. நிர்வாகம் தெரியாது. அடுத்தவரை மதிக்கத் தெரியாது. அடுத்தவர் மனம் கோணாமல் நடக்கத் தெரியாது.

இப்படிப் பல ஓட்டைகள் எம்மிடம் இருக்கும் போது எந்த அதிகாரத்தை நாம் வாங்கினாலும் அந்த அதிகாரம் ஓட்டை வாளியில் ஊற்றிய நீர் தான்.

**தருஷ் — வதிரி**

**யாருக்காகவாவது உங்களை மாற்ற முற்பட்டிருக்கின்றீர்களா வியாசரே?**

ஒரு நாளும் யாருக்காகவும் எமது சுயத்தை மாற்றியதும் இல்லை. மாற்றப் போவதும் இல்லை.

அவ்வாறு மாற்றுவோமாக இருந்தால் நாம் மனிதனாக இருக்க முடியாது. அரசியல்வாதியாகவே இருக்க வேண்டும்.

கவரிமான் இருக்கிறதே அது தனது ஒரு முடியை இழந்தால் கூட தன் உயிரை விட்டு விடுமாம்.

மற்றவர்களுக்காக எம்மை மாற்றுவதென்பது எம் சுயத்தை இழப்பதையே சுட்டி நிற்கின்றது.

அப்படி சுயத்தை இழந்து வாழ்வது ஒரு நாளும் எம் பெயரைச் சொல்லாது என்பது மட்டுமே உண்மையானது.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
**076 097 3126**
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**சுதன் — குப்பிளான்**

**அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும் இது தமிழரசுக் கட்சிக்கும் பொருந்துமா வியாசரே?**

நூற்றுக்கு நூறு விகிதம் பொருந்தும்.

நீங்கள் தமிழ் மக்களின் காவலராய் இருப்பீர்கள் என்று தமிழினம் பலமாய் நம்பியது.

ஆனால் தாங்களோ பதவிகளுக்கும் அற்ப சொற்ப சலுகைகளுக்கும் விலை போய்விட்டதை தற்போதைய தங்களின் செயற்பாடுகள் தெளிவாக விளக்கி நிற்கின்றன. ஒரு சிலர் உண்மையாகவும் நேர்மையாகவும் நடக்கின்றனர். அவர்களின் மக்கள் சேவை சிலரின் குழப்பங்களால் தடைப்படவும் மாசுறவும் செய்கின்றன.

ஆயினும் தர்மம் வெல்ல வேண்டும். அரசியல் பிழைத்தால் அறம் கூற்றாகும். இது சர்வ நிச்சயம்.

**கணேசலிங்கம் — யாழ்ப்பாணம்**

**தீமை நிறைந்த உலகில் வாழ்வது கடினமா வியாசரே?**

உன்னுடைய நண்பனைப் பற்றி கூறு நான் உன்னைப் பற்றிக் கூறுகிறேன் என்று ஒரு வாசகம் உண்டு.

ஆனால் இன்றைய நட்புகள் அவ்வாறு இல்லை. எங்கே, எப்போது, எப்படிக் காலை வாருவார்கள் என்றே தெரியாது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த கண்காட்சி ஒன்றிற்கு சென்றிருந்தேன். எனக்கு முன் நின்றவர் கேட்டார் உங்களை எங்கேயோ பார்த்தது போல இருக்கிறதே என.

நான் சொன்னேன். பத்து வருடங்களாக உங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் தான் நான் இருக்கிறேன் என்று.

ஓ அப்படியா? அதுதான் எங்கேயோ பார்த்தது போல இருந்தது என்று சிரித்துக் கொண்டு சென்றார் அந்த நபர்.

இன்றைய மனிதர்களின் நிலை இதுதான்.

**மதுவன் — மீசாலை**

**தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் சிலருக்கு பொதுவேட்பாளரில் உடன்பாடு இல்லையே வியாசரே?**

தற்போது தமிரசுக்கட்சி நாணயம் அறுந்த மாடு போல ஓடிக் கொண்டிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பதென்பது தொடர்பில் முதலில் அறிவித்தல் விடுக்கப்பட்டது.

அதற்கு பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் எதிர்ப்பை வெளியிட்டார்.

தமிழரசின் மத்திய குழு கூடி இனித்தான் முடிவெடுக்கும் என்றொரு அறிவித்தல். அடநாசமறுப்பு மறுபடியும் சஜித்துக்கே ஆதரவு என்று மீண்டுமொரு அறிவித்தல்

இதில் தமிழ் மக்கள் எதை நம்புவது? எவருக்கு வாக்களிப்பது என்று குளம்பிப் போய் உள்ளனர்.

இதைத் தீர்த்து வைக்க வேண்டியது தமிழரசுக் கட்சியின் தலைமையே.

**தமிழன் — யாழ்ப்பாணம்**

**வியாசரின் ஓட்டு யாருக்கு என்று தெரிந்து கொள்ளலாமா?**

- தமிழ் மக்களின் உரிமைகளைத் தரவல்ல, பெறவல்ல ஒருவருக்கு.
- விலைபோகாது தனித்தாயினும் தமிழர் நிலை கண்டு கலங்கி அவர்களை மீட்பதற்கு முயலும் ஒருவருக்கு.
- எமக்கான உரிமைகளை பெறுகிறோம் என்ற வாக்கைத் தந்துவிட்டு அரசுடன் சேர்ந்து கோடி பணம் வாங்கி வங்கியில் போடாத ஒருவருக்கு.
- ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை எமது வீடுகளுக்கு விசிட் பண்ணாத ஒருவருக்கு
- நாம் நலமாக இருக்க வேண்டும் என்ற ஒப்பற்ற கொள்கையில் இருந்து பின்வாங்காத ஒருவருக்கு
- எங்களின் நிலையை சர்வதேச அரங்கில் நின்று நெஞ்சை நிமிர்த்தி உரத்துக் கூறும் ஒருவருக்கு

இவ்வாறு யாராவது இருந்தால் கூறுங்களேன் அவருக்கே புள்ளடி இடலாம்

**விஜயகுமார் — முகமாலை**

**சமஷ்டி என்பது தமிழரின் தீர்வாக அமையுமா வியாசரே?**

முதலில் சமஷ்டி என்றால் என்ன? அதில் என்னென்ன விடயங்கள் உண்டு என்ற தெளிவு எம்மவர்க்கு வேண்டும்.

இதைப்புரிந்து கொள்ளாமல் எல்லோரும் கேட்கின்றார்கள். ஆதலால் நாமும் கேட்போம் என்று நினைத்துக் கேட்டால் அதில் எந்த அர்த்தமும் இல்லை.

தமிழினத்திடம் எம்மை நாம் ஆளும் ஆளுமை இல்லை என்பது தான் உண்மை.

இதை நாம் கூறும் போது பலருக்கு பொத்திக் கொண்டு கோபம் வரும். வந்தென்ன பயன்

மாகாண சபை அமைக்கப்பட்டு அந்த ஆட்சியை எம்மவர்கள் எப்படிச் செய்தார்கள்?

பிரதேச சபைகள் அமைக்கப்பட்டு அதனூடாக எதைக் கிழித்தார்கள் என்று பட்டியலிடுங்கள். முடிவுகள் படுமோசமாக இருக்கும். எம்மவர்க்கு இன்னொருவரின் காலின் கீழ் இருப்பது தோசமாகிவிட்டது. அவ்வளவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விநாயகர் துணை - அம்

# வடமராட்சி பொலிகண
# திருவருள்மிகு ஸ்ரீபத்திரகாள
# விநாயகர் சித்திரத்தேர் வெள்

## பிரதம குருவின் ஆசிச் செய்தி

"முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த விநாயகர் காக்க"

சீரும் சிறப்பும் பொலிந்து விளங்கும் ஈழத்திருநாட்டின் வடபால் மகுடமென விளங்கும் யாழ்ப்பாணத்தின் வளம் பல பெருகும் வடமராட்சிப் பிரிவில் சைவத்தையும் தமிழையும் இரு கண்களாக போற்றி, தான தருமமும் சிறந்த சிந்தனையும் அழிபசி தீர்க்கும் மாந்தரை தொன்மையாக கொண்டு விளங்கும் பொலிகண்டி மருதாம்புலத்தில் இலுப்பை மரத்தை தல விருட்சமாகக் கொண்டு விளங்கும் திருவருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஷேத்திரத்திலே மனம், மொழி, மெய்யால் தன்னை வழிபடாற்றும் அடியார்களின் துயர்களை நீக்கி அருளும் பொருட்டு விநாயகப் பெருமானுக்கு புதிதாக அமைக்கப்பெற்ற சித்திரத்தேர் நிறைவு பெற்றதையொட்டி குரோதி வருஷம் ஆவணி மாதம் 30 ஆம் நாள் (15.09.2024) ஞாயிற்றுக்கிழமை திருவோண நட்சத்திரமும் துவாதசித் திதியும் கூடிய காலை 11.00 மணி முதல் 01.00 மணிவரையுள்ள சுபவேளையில் விநாயகருக்குரிய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒழுக்கமும் இறைபக்தியும் மனிதவாழ்க்கையில் வேரூன்றும் பொழுது சமுதாயத்தில் அமைதியும் ஒற்றுமையும் மலரும் என்பதில் ஐயமில்லை. ஒரு காலத்தில் திரிபுர தகனத்திற்காக இரதத்தில் ஆரோகணித்தார் இறைவன். பல தத்துவப்பொருள் செறிந்த இரதத்தில் விநாயகப்பெருமான் ஆரோகணித்து ஆன்மாக்களாகிய நம்முள் பற்றியுள்ள (அறியாமையாகி இருளை அகற்றி ஞான ஒழியை) காம, குரோத, மோக, மக, மாச்சாரியங்களை சம்ஹாரம் செய்து முத்திதரும் விழா இரதோற்சவமாகும். அதனாலேயே தேர் வடம் பிடித்தால் வானத்தில் இடம் பிடிக்கலாம் என முன்னோர்கள் இயம்பினர்.

அந்த வகையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திராவிட மரபுச் சித்திரத்தேர் இரதோற்சவத்திற்கு முன்பு கோவிலை ஒரு முறை வலம் வந்து பக்தர்களுக்கு அருகாட்சியாக வரப்போகின்றது என்பதை அறிவிக்கும் பொருட்டு தேரை பக்தர்கள் இன்று இழுத்து வரும் அற்புத விழா தேர் வெள்ளோட்டம் ஆகும். இத் திருக்காட்சியை காண்பதும் வடம் தொட்டு இழுப்பதும் நாம் செய்த பூர்வபுண்ணிய பலனாகும். 15.09.2024 ஞாயிற்றுக்கிழமை இன்று இடம்பெறும் இரதவெள்ளோட்டம் எந்தவிதமான விக்கினங்களும் இன்றி சிறப்பாக நடைபெற வேண்டுமென விநாயகப் பெருமானையும் அன்னை ஸ்ரீபத்திரகாளி அம்பாளையும் வேண்டி வணங்கி அனைத்து அடியார்களுக்கும் நல்லாசிகளை வழங்குகின்றேன்.

"லோக, சமஸ்தா சுகினோ பவந்து "

குமரகுருமணி, கிரியாகலாபமணி
சிப்பிரம்மஸ்ரீ ச.வைத்தியநாதக்குருக்கள் (சமாதான நீதவான்)
பிரதமகுரு, கந்தவனம் தேவஸ்தானம் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
பொலிகண்டி வல்வெட்டித்துறை

சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இனிதே நிகழவும் இந்நிகழ்வு சிறப்புறவும் பக்த கோடிகளாகிய எங்களுக்கு சகல சித்திகளையும் கிடைக்க வேண்டி பரம்பொருளைப் பிரார்த்திப்போமாக!

சிவாச்சாரிய இளவரசு சிவப்பிரம்மஸ்ரீ சிவ.மாதேஷ்சர்மா

## ஆலய பரிபாலனசபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆயைத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கும் விநாயகப் பெருமானுக்கு சித்திரத்தேர் அமையப் பெற்று, வெள்ளோட்டம் காண இருப்பதையிட்டு உவகை கொள்கின்றேன். விநாயகப்பெருமானினதும், பத்திரகாளித் தாயாரினதும் பேரருளாலும், பிரபஞ்சத்தின் பெருங்கருணையாலும் தேர் வெள்ளோட்டம் சிறப்பாக நடைபெற இறையாசியை வேண்டி நிற்கின்றேன். சித்திரத்தேர் சிறப்புற அமைய சகல வழிகளிலும் பாடுபட்ட திருப்பணிச் சபையினருக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.


சிவநாதன் சங்கர்,
ஆலய பரிபாலன சபைத்தலைவர்.

## விநாயகர் சித்திரத் தேர் திருப்பணி திருப்பணிச்சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது மூதறிஞர் வாக்கு. சைவமும் அது சார்ந்த துறையும் வளர்ச்சி காண ஆலயங்கள் உதவுகின்றன. ஆலயங்களை பராமரித்தல் புனருத்தாரணம் செய்தல், நிர்மானித்தல் போன்றன இவற்றுள் அடங்கும். விநாயகர் சித்திரத் தேர் திருப்பணியானது ஒரு வருட காலத்திற்குள் பூர்த்தியானமை விந்தையிலும் விந்தையே.

இத் திருப்பணியானது அம்பிகையின் கிருபா கடாட்சத்தாலும், "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற கூற்றுக்கமைவாக மக்களது பண உதவியாலும் அடியார்களின் தீவிர தொண்டினாலும் ஆலய பரிபாலன சபையின் ஒத்துழைப்புடனும் இத் தரும கைங்கரியம் நிறைவேறி புதிய சித்திரத் தேரின் வெள்ளோட்ட வைபவத்தை இன்று நடத்துவதற்கு என்னுடன் அயராது உழைத்து ஒத்துழைப்பு வழங்கிய அங்கத்தவர்களுக்கும் தேர் உதிரிப் பாகங்களை உரிய நேரங்களில் இரவு-பகல் பாராது கொண்டு வந்து தந்த வாகன உரிமையாளருக்கும் தலைவர் என்ற முறையில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். மேலும் இத்தேர் உருவாக்கத்தின் போது நாம் சந்தித்த சவால்களை மதிநுட்பத்துடன் காலநேரத்தினை கருத்தில் கொள்ளாது கனக கலைக் கூடத்திற்கு சென்று இத்திருத்தேரை நிறைவு பெற அரும்பாடுபட்ட எமது திருப்பணிச்சபை அங்கத்தவர்களுக்கு இறைவனின் அருள்கிடைக்க பிரார்த்திப்பதோடு, இத்தேர் வெள்ளோட்ட விழாவானது சிறப்பாக நடைபெறவும் எல்லோருக்கும் எல்லா நலனும் கிடைக்க வாழ்த்துகின்றேன்.

"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு"
விநாயகர் சித்திரத்தேர் வடம் பிடிப்போம் வாரீர்! வாரீர்!
அ.அருள்நாதர், தலைவர், சித்திரத்தேர் திருப்பணிச்சபை.



## விநாயகப்பெருமான் அடியார்களே!

நிகழும் மங்களகரமான குரோதி வருடம் ஆவணிமாதம் 30 ஆம் நாள் (15.09. ஞாயிற்றுக்கிழமை திருவோண நட்சத்திரமும் துவாதசித் திதியும் கூடிய காலை 11.00 1.00 மணிவரையுள்ள சுபவேளையில் விநாயகருக்குரிய புதிதாக நிர்மாணிக்கப்பட் வெள்ளோட்டவிழா நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் அடியார்கள் வருகை தந்து சித்திரத்தேர் வடம்பிடித்து தேரினை இழுத்து விநாயகப் பெருமானின் தி பாத்திரமாகி இஷ்டசித்திகளைப் பெற்றுய்வீர்களாக!

## வாழ்நாள் சாதனையாளரின் வாழ்த்துச் செய்தி

வரலாற்று பிரசித்திபெற்ற பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய விநாயகப்பெருமான் பவனி வருவதற்கான சித்திரத்தேரும் சிறப்பாக அமைக்கப்பட்டு வெள்ளோட்டமும் காணவுள்ளது.

பஞ்ச கிருத்தியங்களில் அழித்தல் அம்சத்தைக் குறிக்கின்ற அற்புதமான உற்சவமான தேர்த்திருவிழாக்களில் அம்பாளுக்கு பெரியதொரு சித்திரத்தேர் அமைந்தது போலவே விநாயகப் பெருமானுக்கும் சித்தரத்தேர் ஒன்று அமைய வேண்டுமென்று அடியவர்கள் ஆசை கொண்டதன் விளைவாக அம்பிகையின் திருவருளால் அழகான சித்திரத்தேர் ஒன்று ஆனைமுகப் பெருமானுக்கும் அமைந்தது.

ஆனைமுகப்பெருமானின் அழகிய சித்திரத் தேரானது வெள்ளோட்டம் காண்கின்ற நன் நாளிலே வெள்ளோட்ட நிகழ்வானது சிறப்புற எல்லாம் வல்ல அம்பிகையினதும் விநாயகப் பெருமானினதும் அருள்வேண்டி வாழ்த்துக்கூறி அமைகின்றேன்.

பண்டிதர். சைவப்புலவர்.
பொன்.சுகந்தன்.

## ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே ஸ்தபதியின் ஆசியுரை

யாழ். வடமராட்சி, பொலிகண்டியில் எழுந்தருளி அ ஜகத்காரண ஜனனியான பத்திரகாளியின் மூத் ஐங்கரனுக்கு, புதிய வேசர திராவிட மரபுச் சித்திரத் திருவருள் கைகூடி வந்தது.

அது என்னாலும் எனது பஞ்சகிருத்திய பரிவாரர் அமைக்கப்பட்டு இன்று வெள்ளோட்டப் பெருவிழா கான

வெள்ளோட்டம் என்பதும் ஓர் ஊர்தியை அமை ஊர்தியில் விஸ்வகர்மப் பரசிவரூபமாக எழுந்தருள அவரால் செய்யப்படும் தேர்பிரதிஷ்டையும் அவ் ஊர்தி வலம் வருகையுமே வெள்ளோட்டம் ஆகும்.

இவ் வெள்ளோட்டப் பெருவிழா சிறப்புற ஆசி விக்கினேஸ்வரன் அதில் எழுந்தருளி அருள் பிரார்த்திக்கின்றேன்.

ம.பானுதன்-கண

**விநாயகர் சித்திரத்தேர் வடம் பிடிப்போம் வாரீர்! வாரீர்! அனைவரும் வருக! ஆனைமுக**


**கண்ணன் எக்ஸ்போட்**
62, மருதானை வீதி, கெந்தல வத்தளை
தொ.இல: 011 298 2727,
077 388 8167, 077 790 7298
Email-KannaExportsmp@gmail.com

**கணபதி மில் பல்பொருள் வாணிபம்.**
கொற்றாவத்தை.
தொ.இல: 077 617 9076

**ஸ்ரீசாய் ஸ்ருடியோ**
ஆலங்கட்டை வீதி,
கொற்றாவத்தை, பொலிகண்டி
தொ.இல: 077 136 8780

**ஜெயசீலன் விநியோகஸ்தர் சுவீட்ஸ் & பிஸ்கட்ஸ்**
மாதாங்கோயில் வீதி, பொலிகண்டி.
தொ.இல: 077 203 7453

**கனி பெயின்ஸ்**
சகல பெயின்ட் வகைகளும் பெற்றுக்
நீர்வேலி.
தொ.இல: 077 334 55

**தேஜன் பல்பொருள் அங்காடி**
சின்னக்கடை, பொலிகண்டி,
தொ.இல: 077 706 3318

**உசா ஸ்ரோர்ஸ்**
பெரிய கிணற்றடி, பொலிகண்டி.
தொ.இல: 077 625 6320

**K.K.STORES**
காளி கோவிலடி, நவிண்டில் வீதி.
தொ.இல: 077 861 8950

**கிருஷ்ணாஸ் அரைக்கும் ஆலை**
பாலாவித் தெரு, பொலிகண்டி.
தொ.இல: 077 814 0306


**பொலிகை மின் அலங்**
பாலாவித் தெரு, பொலிகண
க.றஜீவன்-தொ.இல: 076 63


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் துணை

# ...ண்டி மருதாம்புலம்
# ...ளி அம்பாள் தேவஸ்தானம்
# ...ள்ளோட்ட விழா-15.09.2024





...5.09.2024)
...11.00 மணிமுதல்
...ப்பட்ட சித்திரத்தேர்
...கள் அனைவரும்
...ன் திருவருளுக்க்

## சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாக்காலம்

**15.09.2024 ஞாயிற்றுக்கிழமை**

*சித்திரத்தேர் நிர்மாணிப்பு*

**விஸ்வப்பிரம்மஸ்ரீ மனோகரன் பானுதன் (கண்ணன்) ஆச்சாரியார் அவர்தம் குழுவினர்-ஆனைக்கோட்டை**

## ...னே நமஹ ...ரை

...ளி அருள் பாலிக்கும் அகில
... மூத்த திருக்குமாரரான
...த்திரத் தேர் அமைக்கின்ற

...வாரர்களாலும் இணைந்து
... காண்கிறது.
...அமைத்த ஸ்தபதியை அவ்
...தருளச் செய்து பூசிப்பதும்
... ஊர்தியின் பரீட்சாத்தமான

... ஆசி கூறி எம்பெருமான்
...அருள்பாலிக்க வேண்டி

...-கண்ணன் ஆச்சாரியார்.

## விநாயகர் சித்திரத் தேர் திருப்பணி சபை செயளாலரின் வாழ்த்துச் செய்தி

ஈழமணித்திருநாட்டின் வடமராட்சி பொலிகண்டி மருதாம்புல பதியிலே கோயில் கொண்டு அருள்பாலிக்கும் ஶ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் விக்கினங்கள் தீர்க்கும் விநாயகப்பெருமானுக்கு சிற்ப சாஸ்திர பிரமாணங்களுக்கு அமைய அழகிய சித்திரத்தேர் உருவாக மூலகாரணமாய் இருந்த விநாயகப் பெருமான் சித்திரத்தேர் ஏறி வீதியுலா வரும் காட்சியை பொலிகண்டி வாழ் மக்கள் கண்ணாரக் கண்டு. மனதார துதித்து பேருவகை கொள்ளப் போகிறார்கள். தம் பாவ வினைகளைப் போக்கும் பொருட்டு பக்தர்கள் தேர் வடத்தைப் பிடித்து இழுத்து முன்னே செல்ல இறைவன் பக்தர்களை நாடி ஊர்வலம் வரும் கண்கொள்ளாக். காட்சியைக் கண்டு பேருவகை கொள்ளும் நற்பேறு நமக்குக் கிடைத்துள்ளது. இறைவனுக்கு வழங்கப்படும் உபசாரங்களில் சிறந்ததொன்றாக அமைவது தேர்த்திரு விழாவாகும். அடியார்களது பக்தியின் சின்னமாக இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படும் சித்திரத்தேர் கலைகளின் பிறப்பிடமாகவும் வளர்ப்பிடமாகவும் அமைவதோடு. ஆலயங்களில் உள்ள பொருட்களில் முதலிடம் பெறுவதும் இதுவேயாகும். நிலையில்லா வாழ்க்கையைத் தேர்ந்துகொள் என்றுரைக்கும் தேரின் வடத்தைப் பிடிக்கும் ஒவ்வொருவரும் தற்பெருமையின்றி இறைபணியில் ஈடுபட்டு தெய்வீகப் பெருவாழ்வு வாழ்வீர்களாக..

த. செல்வநாதன், செயலாளர்,
சித்திரத்தேர் திருப்பணிச் சபை.

## சமர்ப்பணம்

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்- செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்"

என்ற பாடலுக்கமைவாக தேர்த் திருப்பணிச்சபையானது பல இடர்பாடுகளுக்கு மத்தியிலும் விநாயகப்பெருமானுக்கு இரதம் அமைக்கும் பணிக்கு திருவருள் பாலித்ததும் அவளே. விநாயகப்பெருமானுக்கு புதிதாக அமைக்கப்பட்ட அழகிய சித்திரத்தேரின் வெள்ளோட்டம் நடைபெறும் இந்நாளில் இவ்வரிய விழாவினை மனதில் நிறுத்தும் முகமாக தேர்த்திருப்பணிச் சபையினராகிய எம்மால் வெளியிடப்படும் இச்சிறப்பு மலர் விநாயகப்பெருமானினதும் பத்திரகாளி அம்பாளினதும் பாதார விந்தங்களில் பரிமளிக்கும் அற்புத மலராக அமையும் என நம்புகின்றோம். ஆலயத்தில் உருவாக்கப்படும் புதிய தேர் உரிய அமைப்பினை பெற்றுவிட்டதா என பரிட்சித்துப் பார்க்கும் வகையில் முதன்முதலாக நடத்தப்படுவது வெள்ளோட்டமாகும். தேர் ஒன்று கலை எழிலுடன் உருவாகி இறைவனைத் தாங்கித் திருவீதியில் ஓடும் நிலைக்கு வரும் வரை பல்வேறு நிலை சார்ந்தவர்களின் கடின உழைப்பு அதற்குத் தேவை. அதன் பேறாக சகல அழகோடு விளங்குவதும் பார்ப்போர் கண்களை தன்னிடத்தே இருந்து அகலாமல் தேவலோகத் தேர் போல் காட்சியளிக்கின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சித்திரத்தேர் உருவாக்குவதற்கு திருப்பணிச் சபை ஒன்றை தெரிவு செய்து சுயமாக தேர்த் திருப்பணியை நிறைவேற்ற உதவிய ஆலய பரிபாலன சபையினருக்கும் மனமுவந்து அன்பாக பெருமளவு நிதியுதவியினை வாரி வழங்கிய உள்ளூர். வெளியூர் அடியார்க்ளுக்கும் தேர் தரிப்பிடம் அமைத்து தந்த ஆலய பரிபாலன சபைத் தலைவர். திரு.சிவநாதன் சங்கர் அவர்களுக்கும் அர்ப்பணிப்பு சிந்தையுடன் ஈடுபட்டு வாகன உதவி வழங்கிய அன்பர்களுக்கும் சரீர உதவி வழங்கியவர்களுக்கும் இச்சித்திரத்தேரை உருவாக்கிய ஸ்தபதி விஸ்வப் பிரம்மஸ்ரீ மனோகரன் பானுதன் (கண்ணன்) ஆச்சாரியார் அவர்களுக்கும் அவரது குழுவினர் மற்றும் வர்ண வேலை செய்தோர் அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றியினை தெரிவிப்பதோடு "ஊர் கூடித் தேர் இழுத்தல்" என்ற முதுமொழிக்கேற்ப அனைத்து அடியார்களும் வடம் தொட்டு தேர் இழுத்து விநாயகப் பெருமானினதும் எம் பிராட்டியினதும் திருவருட்கடாட்சம் கிடைக்கப் பெற்று வளமுடன் வாழ வாழ்த்துவதோடு இம்மலரினை விநாயகப்பெருமான் பாதாரவிந்தங்களில் சமர்ப்பித்து வழங்குகின்றோம்.

விநாயகர் சித்திரத்தேர் திருப்பணிச் சபை,
ஶ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

## விநாயகர் சித்திரத் தேர் திருப்பணிச் சபை பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

பொலிகண்டி மருதாம்புலம் ஶ்ரீபத்திரகாளி அம்பாள் பதியில் நித்திய நைமித்திய பூசைகளும் வருடாந்த மஹோற்சவமும் குறைவின்றி நடைபெற்று வருகின்றது. இறைவிக்கு நிகழும் மஹோற்சவத்தில் தேர்த் திருவிழாவானது உன்னத இடத்தினை பெறுகின்றமையும் ஏராளமான பக்தர்களை ஈர்க்கும் பான்மையது. சாந்தமும் அமைதியும் பொலியும் சூழலில் அழகும் தூய்மையும் மிளிரும் இவ்வாலயத்தில் அம்பிகையைத் தொடர்ந்து விநாயகப்பெருமானுக்கும் புதிய சித்திரத்தேரினை உருவாக்குவதற்காக இவ்வூர் மக்கள் சித்தம் கொண்டு சித்திரத்தேர் உருவாக்குவதில் தம்மை அர்ப்பணித்து சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவினை இன்று நிகழ்த்துவதன் மூலம் அவர்கள் அனைவரும் தேரின் வடத்தை தொட்டு இழுப்பதினால் தமது பிறவிப் பிணி நீங்கும் வகையில் இறைனது திருவருளுக்கு பாத்திரமானவர்கள் ஆவார். இத் திருப்பணிக்கு குறைவில்லாது நிறைவாக நிதியினை வாரி வழங்கிய அனைத்து அடியவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு அவர்கள் நலமாக வாழ பிரார்த்திக்கின்றேன். நம்மனைவருக்கும் இவ்வெள்ளோட்ட விழா நலம் தரும் விழாவாக அமையவேண்டுமேனவும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானதும் அம்பாளினதும் திருவருள் பொலிவதாகுக. வெள்ளோட்ட விழா இனிதே நிகழவும் சிறப்புற அமையவும் திருவருள் துணை நிற்பதாகுக.

இன்பமே சூழ்க ! எல்லோரும் வாழ்க!

திரு.வீ.சிவஞானசேகரம், பொருளாளர்,
விநாயகர் சித்திரத்தேர் திருப்பணிச் சபை.

## விநாயகர் சித்திரத்தேர் திருப்பணிச்சபை உறுப்பினர்களின் வாழ்த்துச் செய்தி

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்றார் ஔவைப் பிராட்டியார். அவ் அரிய பிறவியில் பிறவித் துன்பத்தைக் கடக்கும் படிகளான பஞ்சகிருத்தியங்களை உணர்த்துவது மஹோற்சவமாகும். இதில் அழித்தல் தொழிலை உணர்த்துவது இரதோற்சவமாகும். இரதோற்சவ தின நிறைவில் சம்காரத் தொழிலாகிய அழித்தல் தொழிலை நிறைவுபடுத்திய பின் அருளல் தொழிலுக்கு ஆயத்தமாகும் நிலையை உணர்த்துவதே பச்சை சாத்துகின்ற குளிர்வு நிகழ்ச்சியாகும். இவ்வுண்மையை உணர்த்த, தெளிவுபடுத்த ஆகம முறைப்படி அமையப் பெற்ற இரதம் ஆலய அமைப்பில் முக்கியத்துவம் பெறுகிறது.

"ஒற்றையணிருப்பும் ஒரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழி மூன்றும்-பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனதில் எப்பொழுதும்
கொண்டைக் கால் வராத கூற்று"

இந்து சமயத்திலே சகல கிரியைகள் பூஜைகள் வழிபாடுகள் விழாக்கள் என்பவற்றில் முதல் கடவுளாகப் போற்றப்படுபவர் விநாயகப் பெருமான். அவரை வணங்காமல் தொடங்கும் பணிகள் தடைபடும் என்பது ஐதீகம். அத்தகைய விநாயகப் பெருமானுக்கு சித்திரத்தேர் அமையப் பெற்று வெள்ளோட்டம் நடைபெறவுள்ளதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். இச் சித்திரத்தேர் உருவாக்கத்தில் அர்ப்பணிப்புச் சிந்தையுடன் ஈடுபட்ட அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் இத்திருப்பணிச் சபைக்கு அங்கத்தவர்களாக அங்கீகரித்துப் பணியாற்ற வேண்டிக் கொண்ட ஊர் பெருமக்களுக்கும் மனங்கனிந்த நன்றி. இத் திருப்பணிக்கு நிதியுதவி செய்தவர்களுக்கும் தேர்த்திருப்பணியை நிறைவாக்கிய ஆசாரியர்களுக்கும். விழாவைத் தரிசிப்போருக்கும் விநாயகப்பெருமான் பேரருள் புரிவராக.

பொலிகண்டி மருதாம்புலம் ஶ்ரீபத்திரகாளி அம்பாளுடைய வீதியில் மூலமந்திரத்தை ஒலித்திட மணியோசை குலுங்க விநாயகப் பெருமான் சித்திரத்தேர் சீராக உலாவருவதைக் காணும் கண்கள் பயனுடைய கண்கள்! வாழ்த்தும் வாயே வாய்! வணங்கும் தலையே தலை! தேரையிழுத்து நிறுத்துவோர் கரங்களே கரங்கள்! இச் சித்திரத்தேர் வெள்ளோட்ட காட்சியை நினைத்து வணங்குகின்றோம்! வாழ்த்துகின்றோம்.

தேர் திருப்பணிச் சபை உறுப்பினர்கள்.
தா.குகதாஸ், தா.முருகதாஸ்,
மா.கனகலிங்கம், ச.தயாபரன்,
ஜெ.சேந்தன், கோ.மயூரதாஸ்,
பு.சிந்துஜன், ஜெ.சுதாகர்.


...றகன் அருள் பெறுக...!

...ர்ஸ்
...ற்றுக்கொள்ளலாம்
...4 5506

...லங்காரம்
...லிகண்டி.
...76 635 6691

**அம்பாள் கபே**
இல.8, கொரவப் பொத்தானை றோட்,
வவுனியா.
தொ.இல: 077 642 2748

**விஷ்ணு ஐஸ்கிறீம்**
இளமாலை, பொலிகண்டி.
தொ.இல: 077 220 8429

**தரன் சவுண்ட்** பொலிகண்டி.

**ப.ராஜேஸ்வரக் குருக்கள்**
அபரக் கிரியைகள் செய்வதற்கு தொடர்பு கொள்ளுங்கள்.
தொ.இல: 077 375 3271

**ஜெயா மணப்பந்தல் சேவை**
பத்திரகாளி கோவிலடி, பொலிகண்டி.
தொ.இல: 077 994 4478

**தேர்த்திருப்பணி உபயம்: பொதுமக்கள்**


**ஶ்ரீரங்கம் ரெக்ஸ்**
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.இல: 021 226 1417

**செல்வபூங்கா பதிப்பகம்**
பொலிகண்டி.
தொ.இல: 075 759 5029

**அம்பாள் மணப்பந்தல் சேவை**
...டி, பொலிகண்டி.

**லக்ஷ்மி வெதுப்பகம்**
நடமாடிச் சேவை செய்யும் பேக்கரி.
உரிமையாளர் அத்துடன் சிறந்த பாதுகாப்புடன் பிரயாணம் செய்ய A/C வசதியுடன் வான் வசதியும் செய்து கொடுக்கப்படும்.
T.சுரேந்தர், கெருடாவில்.
தொ.இல: 076 657 6499


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# 'கால்வைத்தாவர்கள் உயிருடன் திரும்பியதில்லை'
# சென்டினல் தீவு-ஒரு திக்திக் பயணம்

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

எனவே சென்டினலீஸ் மக்கள் ஒரு நூற்றாண்டு வரை வெளி உலக தொந்தரவு இல்லாமல் இருந்தார்கள். இதன்பிறகு நினிவே என்று அழைக்கப்படும் ஒரு இந்திய வணிகக் கப்பல் இத் தீவின் அருகே ஒரு பாறையில் மோதி விபத்திற்கு உள்ளானது. கப்பலிலிருந்த 86 பயணிகளும் 20 பணியாளர்களும் கடலில் நீந்தி வடக்கு சென்டினலீஸ் கடற்கரைக்குச் சென்றனர். அவர்கள் தீவில் மூன்று நாட்கள் தங்கியிருந்தனர். அப்போது சென்டினலீஸ் மக்கள் கரைக்கு வந்தவர்களை வில் அம்பு கொண்டு தாக்கினர். நினிவே கப்பலைச் சார்ந்தவர்களும் பதிலுக்குக் கற்கள், கம்புகளைக் கொண்டு தாக்கினர்.

மேலும் கப்பல் விபத்தில் தப்பியவர்களை மீட்பதற்காக ராயல் கடற்படை கப்பல் வரும் வரை இரு தரப்பினரும் மோதிக் கொண்டுதான் இருந்தனர். இதை ஒட்டிதான் பிரிட்டீஷ் இந்தியாவின் காலனித்துவ பகுதியாக சென்டினல் தீவை அறிவிக்க ஆங்கிலேயர்கள் முடிவு செய்தனர்.

இது 1880 ஆம் ஆண்டில் மாரிஸ் விடல் போர்ட்மேன் என்ற இளம் ராயல் கடற்படை அதிகாரி அந்தமான் மற்றும் நிக்கோபாருக்குப் பொறுப்பேற்றார். போர்ட்மேன் தன்னை ஒரு மானுடவிய லாளனாகக் கருதினார்.மேலும் 1880 இல் அவர் வடக்கு சென்டினல் தீவில் கடற்படை அதிகாரிகள், அந்தமான் தீவில் உள்ள தண்டனைக் காலனியைச் சேர்ந்த குற்றவாளிகள் மற்றும் அந்தமானின் வழிகாட்டிகள் அடங்கிய ஒரு பெரிய குழுவுடன் தரையிறங்கினார்.

அப்போது அவர்கள் அவசரமாகக் கைவிடப்பட்ட கிராமங்களை மட்டுமே கண்டுபிடித்தனர். ஊடுருவல்காரர்கள் வருவதைக் கண்ட மக்கள், மேலும் உள்நாட்டில் மறைந்திருக்கும் இடங்களுக்குத் தப்பிச் சென்றதாகத் தெரிகிறது. ஆனால் ஒரு வயதான தம்பதியினரும் நான்கு குழந்தைகளும் மட்டும் தப்பிச் செல்லும் முயற்சியில் தோல்வியுற்று தங்கியிருந்தனர்.போர்ட்மேனும் அவரது தேடுதல் குழுவினரும் அவர்களைப் பிடித்து, அந்தமான் காலனித்துவ தலைநகரான போர்ட் பிளேயருக்குக் கொண்டு சென்றனர்.

இவ்வாறு கொண்டு வரப்பட்ட ஆறு சென்டினலீஸ் மக்களும் கடுமையாக நோய் வாய்ப்பட்டனர். மேலும் வயதான அந்த தம்பதியினர் போர்ட் பிளேயரில் இறந்தனர். நோய்வாய்ப்பட்ட நான்கு குழந்தைகளையும் மீண்டும் வடக்கு சென்டினல் கடற்கரையில் ஒரு சிறிய பரிசுப் பொருட்களுடன் இறக்கிவிடுவது நல்லது என்று போர்ட்மேன் முடிவு செய்தார். குழந்தைகள் தங்கள் நோயை மற்ற மக்களுக்குப் பரப்பினார்களா அல்லது அதன் தாக்கம் என்னவாக இருந்திருக்கும் என்பது தெரியவில்லை.1896 ஆம் ஆண்டில், தப்பியோடிய ஒரு குற்றவாளி அந்தமான் தீவு தண்டனைக் காலனியிலிருந்து ஒரு தற்காலிக படகில் தப்பிச் செல்ல முயன்றார். அவர் வடக்கு சென்டினல் தீவில் கரை ஒதுங்கினார். ஒரு தேடுதல் குழுவினர் சில நாட்களுக்குப் பிறகு, அவரது தொண்டை வெட்டப்பட்ட நிலையில், அம்புக் காயங்கள் நிறைந்த அவரது உடலின் எச்சங்களைக் கண்டுபிடித்தனர்.

இதன் பிறகு ஆங்கிலேயர்கள் புத்திசாலித்தனமாக சென்டினலிஸ்களை அமைதியுடன் விட்டுவிட முடிவு செய்தனர்.

**சென்டினலிஸ்டுகளோடு நட்பை உருவாக்குவது சாத்தியமா?**

நினிவே சம்பவத்திற்கு நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, இந்திய அரசாங்கத்தின் கீழ் பணிபுரியும் திரினோக் நாத் பண்டிட் தலைமையிலான மானுடவியலாளர்கள் குழு வடக்கு சென்டினல் தீவில் தரையிறங்கியது. போர்ட்மேனைப் போலவே, அவர்களும் அவசரமாக கைவிடப்பட்ட குடிசைகளை மட்டுமே கண்டுபிடித்தனர். பண்டிட் மற்றும் அவரது குழுவினர் துணி, மிட்டாய் மற்றும் பிளாஸ்டிக் வாளிகள் முதலான பரிசுகளை விட்டுச் சென்றனர்.

இதற்கிடையில், 1947 இல் இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து வடக்கு சென்டினல் தீவு சட்டப்பூர்வமாக ஒரு குழப்ப நிலையிலிருந்தது. 1970 இல் தனிமைப்படுத்தப்பட்ட இந்த சிறிய தீவுக்கு இந்தியா உரிமை கோரியது. மேலும் ஒரு கணக்கெடுப்பு கற் பலகையைக் கடற்கரையில் பதித்தது. இதற்கு சென்டினலிஸ் மக்களிடமிருந்து எந்த பதிலும் இல்லை.

பண்டிட்டும் அவரது சகாக்களும் சென்டினலிஸ்டுகளை தொடர்ந்து தொடர்பு கொள்ள முயன்றனர். கடற்கரையில் தேங்காய் மற்றும் பிற பரிசுகளைக் கீழே இறக்கி, அவசரமாகப் பின்வாங்கினார். சென்டினலீஸ்கள் பரிசுப் பொருட்களிலிருந்த உயிருள்ள பன்றிகளைப் பொருட்படுத்தவில்லை. அவர்கள் ஈட்டியை எறிந்து பின்னர் மணலில் பன்றிகளைப் புதைத்தனர். பிளாஸ்டிக் பொம்மைகளையும் அவ்வாறே புதைத்தனர். ஆனால் உலோகப் பானைகள் மற்றும் சட்டிகளால் அவர்கள் மகிழ்ச்சியடைந்ததாகத் தோன்றியது. மேலும் அவர்கள் தீவில் வளராத தேங்காய்களை மிகவும் விரும்பினர்.

இத்தகைய வெளியுலக வருகைகள் 1981 வரை அவ்வப்போது இருந்தன. 1974 இல் ஒரு நஷனல் ஜியோகிராஃபிக் படக் குழுவினர் தீவுக்கு அருகே வந்தனர். குழுவின் இயக்குநர் தொடையில் சென்டினலிஸ்டுகளால் ஏவப்பட்ட அம்பு ஒன்று பாய்ந்தது. நாடுகடத்தப்பட்ட பெல்ஜியத்தின் மூன்றாம் லியோபோல்ட் மன்னன் 1975 இல் ஒரு படகு பயணத்தில் தீவுக்கு அருகில் சென்றார். அப்போதும் சென்டினலிஸ்கள் அவரை அம்புகளால் எச்சரித்தனர். (அடுத்தவாரம் தொடரும்)

# கழிவுகளைப் போட்டால் காசு

பயன்படுத்திய பிளாஸ்டிக் பொருள்களை எங்களிடம் கொடுங்கள், அதற்கு ஈடான பணத்தைப் பெற்றுக்கொள் ளுங்கள்' என்ற அறிவிப்புடன் மொபைல் செயலி இணையத் தளம், கூடவே ஆங்காங்கே பிளாஸ்ரிக் பொருள்களைப் பெறுவதற்கான மெஷின்களையும் நிறுவி, கடந்த 7 ஆண்டு களில் 12 பில்லியன் பிளாஸ்ரிக் பொருட்களைச் சேகரித்து பெரும் சாதனையைச் செய்துள்ளது அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் அரசு மூலமாகச் செயற்படுத்தப்பட்டுவரும் 'ரிட்டர்ன் அண்டு ஏர்ன்' அமைப்பு.

அவுஸ்திரேலியா நாட்டின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலம், மக்கள் தொகை அதிகமுள்ள பகுதி. கடந்த 2017 ஆம் ஆண்டு இம்மாநில அரசு பிளாஸ்டிக் பொருட்கள், கண்ணாடி போத்தல்கள், குளிர்பான கேன்கள் ஆகியவற்றை முறையாகச் சேகரித்து மறுசுழற்சி செய்வதற்குத் திட்டமிட்டது. குப்பைகளில் இருந்து பிளாஸ்ரிக் பொருட்களைப் பிரித்து வெளியேற்ற வேண்டும் என்ற விதிமுறை பல ஆண்டுகளாக இருந்தாலும், மக்களில் பெரும்பான்மையோர் இதைப் பின்பற்றவில்லை. எல்லாக் கழிவுகளையும் ஒன்றாகவே வெளியேற்றினர். இதனால் கழிவுகளைப் பிரித்தெடுத்து, அதை மறு சுழற்சிக்கு அனுப்புவது பெரிய வேலையாக இருந்துவந்தது. கழிவுகளைப் பிரித்தெடுப்பதில் மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டினால் மட்டும் போதாது, ஈடுபாட்டோடு அதைச் செய்ய வைக்க வேண்டும் என்று எண்ணியது நியூ சவுத் வேல்ஸ் அரசு. இதைத் தொடர்ந்து 'ரிட்டர்ன் அண்டு ஏர்ன்' திட்டத்தைச் செயற்படுத்த முன்வந்தது.

இதன்படி, பயன்படுத்திய பிளாஸ்ரிக் போத்தல்கள், கண் ணாடிப் போத்தல்கள் மற்றும் குளிர்பான கான்களைச் சேகரித்துக் கொடுப்பவர்களுக்கு, அவர்கள் கொடுக்கும் எண்ணிக்கைக்கு ஏற்ப பணம் தரப்படும் என்ற அறிவிப்புடன் மொபைல் செயலியும் வெளியிடப்பட்டது. வீட்டிலிருக்கும் பிளாஸ்ரிக் போத்தல்களைச் சேகரித்து அருகிலிருக்கும் மெஷின்களின் உள்ளே போட்டு மொபைல் செயலியில் தேவையான தகவல்களைத் தெரிவித்தால், கழிவுகளுக் குண்டான பணம் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். சில இடங்களில் நேரடியாகவும் கழிவுகளைக் கொடுக்கலாம். கழிவுகளைச் சேகரிப்பதற்கான பைகளையும் கொடுத்து விடுகிறார்கள். அதில் கழிவுகளைப் போட்டு எடுத்துச் சென்று மெஷின்களில் போடலாம். குழந்தைகளையும் இதில் ஆர்வத்துடன் ஈடுபட வைக்கிறார்கள்.

இந்த சேவைக்காக, நூற்றுக்கணக்கான தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக சேவை நிறுவனங்கள் அரசோடு இணைந்து செயலாற்றுகின்றன. அரசின் 'ரிட்டர்ன் அண்டு எர்ன்' ஆப்ஸ் 300 இற்கும் மேற்பட்ட தொண்டு நிறுவனங் களைக் கொண்டுள்ளது. பிளாஸ்ரிக் போத்தல்கள் சேகரிக்கும் இத்திட்டத்தில், மக்கள் கொடுக்கும் பிளாஸ்ரிக் போத்தல்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பணத்தைக் கொடுப்பதோடு, அதன் மூலம் அவர்கள் சுற்றுச்சூழலுக்கு எந்த அளவுக்கு நன்மை செய்திருக்கிறார்கள் என்ற கணக்கும் தெரிவிக்கப்படுகிறது. இது மக்களை, 'பரவாயில்லையே... நம்மால் சுற்றுச்சூழலுக்கு இந்தளவுக்கு நன்மை செய்ய முடிந்திருக்கிறதா' என்று எண்ண வைக்கிறது. பிளாஸ்டிக் கழிவுகளைச் சேகரிக்கும் இடம் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணிக் காக்கப்படுகிறது.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், மறுசுழற்சி செய்வதை ஊக்கப்படுத்தவும், பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் கேன்களை மதிப்புமிக்க பொருளாக மாற்றவும் இத்திட்டம் பெரிய அளவில் கைகொடுத்துவருகிறது. இத்திட்டத்தின் மூலம் மக்களுக்கு உபரி வருமானம் மட்டுமல்லாமல் அரசுக்கும் கழிவுகளைக் கையாள்வதில் பெருமளவில் செலவு மிச்சமாகிறது. இந்தத் திட்டத்தை அவுஸ்திரேலியா நாடு முழுவதும் செயற்படுத்தத் திட்டமிட்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: கர்ணன்
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: வி.ஆர்
பாடியோர்: பி. சுசீலா



கண்கள் எங்கே நெஞ்சமும் எங்கே
கண்டபோதே சென்றன அங்கே
கண்கள் எங்கே நெஞ்சமும் எங்கே
கண்டபோதே சென்றன அங்கே

கால்கள் இங்கே மேனியும் இங்கே
கால்கள் இங்கே மேனியும் இங்கே
காவலின்றி வந்தன இங்கே
ஆ ஆ ஆ ஆ ஆ
கண்கள் எங்கே நெஞ்சமும் எங்கே
கண்டபோதே சென்றன அங்கே

மணி கொண்ட கரமொன்று அனல் கொண்டு வெடிக்கும்
அனல் கொண்டு வெடிக்கும்
ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ
மணி கொண்ட கரமொன்று அனல் கொண்டு வெடிக்கும்
அனல் கொண்டு வெடிக்கும்
மலர் போன்ற இதழின்று பனி கண்டு துடிக்கும்
மலர் போன்ற இதழின்று பனி கண்டு துடிக்கும்
துணை கொள்ள அவனின்றி தனியாக நடிக்கும்
துயிலாத பெண்மைக்கு ஏனிந்த மயக்கம்
ஆ ஆ ஆ ஆ ஆ ஆ

கண்கள் எங்கே நெஞ்சமும் எங்கே
கண்டபோதே சென்றன அங்கே

இனமென்ன குலமென்ன குணமென்ன அறியேன்
குணமென்ன அறியேன்
இனமென்ன குலமென்ன குணமென்ன அறியேன்
குணமென்ன அறியேன்
ஈடொன்றும் கேளாமல் எனையங்கு கொடுத்தேன்
துடி கொண்ட மதயானை உயிர் கொண்டு நடந்தான்
குறை கொண்ட உடலோடு நானிங்கு மெலிந்தேன்
ஆ ஆ ஆ ஆ

கண்கள் எங்கே நெஞ்சமும் எங்கே
கண்டபோதே சென்றன அங்கே
கண்கள் எங்கே

# அதிகரித்துவரும் வீதிவிபத்துக்கள் தடுத்து நிறுத்தப்படுமா?

தற்போது அதிகமான உயிர்களை காவுகொள்ளும் ஒரு நிகழ்வாகவே. இந்த வீதிவிபத்துக்கள் அதாவது மனிதனுடைய போக்குவரத்துக்கான வீதி அல்லது பாதை நெடுகிலும் இன்றைய தொழில்நுட்ப சாதனங்களின் வளர்ச்சியின் காரணமாக பல்வேறு வாகனங்கள் நடமாடுவதனைக் காணலாம்.

இவ்வா றாக மனித பெருக்கமும்.வாகன பயன் பாடுகளின் ஆதிக்கமும் இன்று அதிகமான வீதிவிபத்துக்களை ஏற்ப டுத்துவதற்கு காரணமாக அமைந்து விடுகின்றன.

மனிதன் அன்றாடம் தன்னுடைய போக்குவரத்துக்காக பயன்படுத்தக்கூடிய வீதிகளில், நிகழக்கூடிய விபத்துக்கள் இன்று பெருமளவில் அதிகரித் துள்ளமையை காணலாம். இதனை சர்வதேச நிறுவனங் களும் உறுதிப்படுத்தி உள்ளன. வீதி விபத்துக்களின் மூலம் வருடம் ஒன்றில். பல இலட்சம் மக்கள் உயிரிழப்பதுடன் அவர் களுள் அதிகமானோர் இளம் வயதினராகவும் காணப்படுகின்றனர்.

இலங்கையில் வீதிவிபத்துகளை கட்டுப்படுத்தும் நோக்குடன் பல்வேறு சட்டதிட்டங்கள், அறிவூட்டல் வேலைத்திட்டங்கள் என்பவை முன்னெடுக்கப்பட்டாலும் வீதிவிபத்துகளின் எண்ணிக்கையானது கணிசமான அளவு அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. சுகாதார அமைச்சின் தகவல்களின்படி நாலரை மணித்தியாலத்துக்கு ஒரு வீதி விபத்து ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது.

மோட்டார் சைக்கிள்கள், தனியார் பேருந்துகள். முச்சக்கர வண்டிகள்,லொறி, டிப்பர் போன்ற வாகனங்களே அதிக அளவில் விபத்துக்கு உள்ளாகின்றன. இதற்குகாரணம் சட்டதிட்டங்களை மதித்துநடக்காமை ஆகும். விதிக்கப்பட்ட சட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி இருந்தாலும் அதனை பின்பற்றுவதற்கு சாரதிகள் தயாராகவில்லை. மேலும் அவர்களது அசாதாரண தன்மையே இதற்கு பிரதான காரணமாகும்.

இவர்களது அசாதாரணத் தன்மையினால் உயிர்கள் காவு வாங்கப்படுகின்றன. இன்றைய நாட்களில் பாடசாலைசெல்லும் மாணவர்களே அதிகளவில் விபத்துக்கு ஆளாக்கப்படுகின்றனர். ஒருஉயிரைப் பறிகொடுப்பது என்பது சர்வசாதாரணமான விடயமல்ல.

வீதிவிபத்துகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக அமைவது கவனயீனமும் வாகனசாரதிகள் வீதி சட்டதிட்டங்களை மீறுவதுமேயாகும். அதுவும் அதிக வேலைச் சுமைக்குமத்தியில் குறிப்பிட்ட நேரத்தில் தங்களுடைய வேலைகளை செய்துமுடித்துவிட வேண்டுமென்று பொறுமையிழந்து அதிக வேகத்துடன் வாகனத்தை செலுத்துகின்றார்கள்.

ஆனால், அந்த ஒரு நிமிடம் வேகமாகச் செல்லவேண்டுமென்ற எண்ணம் அவர்களுடைய உயிருக்கு உலைவைப்பதுடன் அவர்களுடைய குடும்பத்தையும் வாழ்நாள் முழுவதும் சோகத்தில் தள்ளிவிடுகின்றது.

வீதிவிபத்துகளினால் தமது உறவுகளை பிரிந்தவர்களின் அழுகுரல்களும்.அவலங்களும் வாழ்நாள் முழுவதும் ஆறாத வடுக்களாகவே தொடருகின்றன. அதுமட்டுமின்றி. வீதிவிபத்துகளினால் தமது அவயவங்களில் ஒருபகுதியை இழந்து வாழ்பவர்கள் தங்களால் இன்னுமொருவரின் உதவியின்றி எதையும் செய்யமுடியாது என்ற நிலையில் வாழ்கின்றார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை 18 வயது பூர்த்தியடைந்தவுடனேயே எவ்வித கல்வித் தகைமைகளுமின்றி குறிப்பிட்ட நிறுவனமொன்றில் பயிற்சிகளைப் பெற்று அந்த நிறுவனத்தின் ஊடாகவே சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கின்றது.

எனவே பல இளைஞர்கள் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றவுடனே "கையில் லைசன்ஸ் இருக்கின்றது. இனி பயப்பட தேவையில்லை" என்ற எண்ணத்தில் அலட்சியமாக இருந்து விடுகின்றார்கள்.

எது எவ்வாறாயினும் அண்மைக்கால வீதி விபத்து சம்பவங்களைக் கருத்தில் கொண்டு இது தொடர்பில் நிதானத்துடனும், பொறுமையுடனும் செயற்படுவது அவசியமாகின்றது. அவசரம், நாகரிகம், வேகம் இவற்றால் எதையும் சாதித்து விட முடியாது என்பதை இன்றைய இளைய சமூகத்தினர் உணர்வு பூர்வமாக உணர்ந்து செயற்பட வேண்டும்.

இதனை இழிவளவாக்குவதற்கு பாடசாலை மாணவர்களுக்கு வீதி விபத்துக்கள் மற்றும் சட்டதிட்டங்கள் பற்றிய ஒரு விழிப்புணர்வுகளை வழங்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகின்றது.

இதே போல் இன்று எண்ணிலடங்காத வீதி விபத்துக்கள் நடந்தாலும் மீண்டும் மீண்டும் அதே சம்பவம் நடந்து கொண்டே தான் இருக்கின்றதே ஒழிய அதனை குறைப்பதற்கான தீர்வுகளோ வழிமுறைகளோ எங்கும் கிடைப்பதில்லை.

### வீதியின் ஒழுக்க நெறிமுறைகள்

நாம் ஒவ்வொருவரும் வீதிகளில் பயணம் செய்யும் போது அதற்கென தனியான ஒழுக்க நெறிமுறைகள் காணப்படுகின்றன.

அதாவது நடந்து பயணிககும் ஒருவர் வீதியின் வலப்புறமாகவும், வாகனங்களில் பயணிக்க கூடியவர்கள் வீதியில் இடப்புறமாகவும் செல்ல வேண்டும். இங்கு நடந்து செல்பவர் அவருக்கு எதிரே வரக்கூடிய வாகனங்களை அவர் கண்ணினால் பார்த்து அதற்கு ஏற்றவாறு நடந்து செல்ல முடியும் என்பது முக்கியமானதாகும்.

மேலும் வாகனங்களில் பயணிக்க கூடியவர்கள் வீதிச் சமிக்ஞைகள். குறியீடுகள் என்பவற்றினை மிகுந்த கவனத்துடன் அவதானித்து செயற்படுதல் வேண்டும். இவ்வாறாக வீதியின் ஒழுக்க நெறிமுறைகளை முழுமையாக பின்பற்றுவதானது வீதி விபத்துக்களை குறைப்பதற்கு உதவும்.

இன்றைய கால கட்டங்களில் வாகன விபத்துகள் அதிகமாக இடம்பெறுவதனால்.வாகனங்களை செலுத்தக்கூடிய ஒவ்வொரு சாரதிகளையும் பொறுப்புடையவர்களாக மாற்றவேண்டும்.


இதற்காக ஒவ்வொரு உயிர்களினதும் பெறுமதி பற்றி சாரதிகளுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும்.

மேலும் வீதி ஒழுக்க நெறிமுறைகளை மீறக்கூடிய சாரதிகளை கடுமையான சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்துதல் வேண்டும்.

அத்தோடுபாதுகாப்பான வீதிக் கடவைகள்.வீதிச் சமிஞைகள் என்பவற்றினை பயன் படுத்துதல் வேண்டும்.

வீதிகளில் அதிகமான வாகனங் கள் பயணிப்பதும் வீதி விபத்துக்கள் ஏற்படக் காரணமாக அமையும்.

**செக்கலிங்கம் லோஜினி,**
**ஊடக கற்கைகள் துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை




27 செங்கை ஆழியான்

இது இந்த ஆள் புலத்தின் சரியான குறியீடாக விளங்குவதைப், பதினேழாம் நூற்றாண்டில் இந்த மண்ணில் கால்பதித்து நிலை கொண்ட ஒல்லாந்தர் உணர்ந்திருந்தனர்.

ஒல்லாந்தத் தளபதி றைக்ளோப் வன் ஹூன்ஸ் யாழ்ப்பணத்தைக் கைப்பற்றிய போது அவனுக்கு வயது 39 ஆகும் . 1619 ஆம் ஆண்டு பிறந்த றைக்ளோப் வன் ஹூன்ஸ் டச் கம்பனியில் உயர் பதவிகளை வகித்துள்ளான். கம்பீரமான நெடிய உருவத்தைக் கொண்டவன். சிறந்த போர் வீரன். அவனை அவனது சகாக்கள் "உயரமான கப்ரின்" எனவும் யாழ்ப்பாணச் சுதேசிகள் "பெரிய ஒல்லாந்தேசு" எனவும் அழைத்துள்ளனர். 1662 ஆம் ஆண்டு இலங்கை முழுவதற்குமான கவனராக நியமிக்கப்படும் வரை, யாழ்ப்பாணப் பட்டினக் கோட்டையின் கம்மாந்தராக விளங்கியுள்ளான். இடையில் சில வருடங்கள் பத்தேவியாவிலிருந்துவிட்டுத் திரும்பி இலங்கைக்கு வந்து 1675 வரை கவனராகக் கடமையாற்றினான். பின்னர் தனது மகனிடம் பதவியைக் கையளித்துவிட்டு பத்தேவியாவிற்குத் திரும்பினான் றைக்ளோப் வன் ஹூன்சினிடமிருந்து யாழ்ப்பாணக் கமாண்டரியின் ஆட்சிப் பொறுப்பை 1662 இல் லோறன்ஸ்பைல் என்பவன் ஏற்றான்.

றைக்ளோப் வன் ஹூன்ஸ் வகுத்த திட்டப்படி யாழ்ப்பாணக் கோட்டையை முழுமைப்படுத்தியதில் பைலிற்குப் பெரும் பங்குள்ளது. கண்டி மன்னனால் 1660 ஏப்ரல் 4 ஆம் திகதி கைதாகிய றொபோட் நொக்ஸ் என்பவன் 19 வருடங்கள் சிறையில் வாடி, 1679 ஒக்டோபர் 18 ஆம் திகதி தப்பியோடி காடுகள் கிராமங்களுடாக அரிப்பு எனுமிடத்தை வந்தடைந்து ஒல்லாந்தரிடம் அடைக்கலம் புகுந்தான். அப்பரிதாபத்திற்குரிய றொபோட் நொக்ஸை கொழும்புக்கு அழைத்துச் சென்று பத்தேவியாவிற்கு அனுப்பி வைத்தவன் லோறன்ஸ் பைல் ஆவான்.

ஒல்லாந்தர் காலத்தில் அடிக்கடி யாழ்ப்பாணக் கோட்டைக்கு ஊழியம் (இராசகாரியம்) செய்வதற்கு யாழ்ப்பாண மக்கள் சென்று வந்தனர். கோட்டையின் பொக்கிஷக்காரனுக்கு வரிகளாகச் சேர்கின்ற செப்புக் காசுகளை எண்ணுவதற்கு கடைகளிலிருக்கும் சோனகர் சென்று வந்தனர். இவர்களோடு கடைகளில் வியாபாரம் செய்யும் செட்டிகளும் பரவர்களும் பொக்கிஷக் காரனுக்கு காசு எண்ணுவதற்கு உதவி வந்தனர். சிவியர் என்போர் கம்மாந்தர், உயர் அதிகாரிகளின் பல்லக்கு காவிகளாகவும், கோட்டை வீடுகளுக்கும், பறங்கித் தெரு (சீதாரி - Pettah) வீடுகளுக்கும் நல்ல தண்ணீர் அள்ளி வழங்கும் ஊழியத்தையும் செய்து வந்தனர்.

(தொடரும்...)

# கடல் புறா




காலத்தின் பதிவு 124

கரையில் பாதி இழுக்கப்பட்டுப் பக்கவாட்டில் லேசாகச் சாய்க்கப்பட்டிருந்த அந்தப் பெரும் மரக்கலத்தின் ஒரு பக்கப் பலகையோ கண்ணுக்குத் தெரிந்தாலும் அதில் ஒட்டி உறைந்து அரையடி கனத்துக்குமேல் படிந்திருந்த கடற்பாசியையும் பெரும் கிளிஞ்சல்களையும் நானாவித பற்பலவித சிப்பிகளையும் கடல் நுரைக்கட்டிகளையும் கண்ட மஞ்சளழகி அந்தக் கப்பலைப் பழுது பார்த்து ஒரு வருடத்துக்குமேல் ஆகியிருக்குமென்பதை உணர்ந்து கொண்டாள்.

தவிர அந்தப் பலகையில் பிடித்திருந்த பாசிகளின் இடையே தெரிந்த பெரும் பிளவுகள் மரக்கல அடிப்பலகைகள் லேசாக இடைவெளியளித்ததையும் குறிப்பிட்டன. ஆகையால், மரக்கலத்தை அப்போது பழுது பார்க்காவிட்டால் அதைக் கடலில் செலுத்துவது பெரும் அபாயமென்பதையும் மஞ்சளழகி அறிந்து கொண்டாள்.

சதா கடலில் ஓடும் கொள்ளையருடன் வருடக்கணக்கில் பழகியதன் காரணமாக மரக்கலங்களின் நுட்பங்களை அறிந்திருந்த மஞ்சளழகி அந்த மரக்கலத்தின் அடிப்பகுதியை மட்டும் பழுது பார்ப்பது அவசியமாயிருப்பதை உணர்ந்து கொண்டால் ஆனாலும் மரக்கலத்தைச் செப்பனிடும் தொழிலாளிகள் அதன்மேற் பகுதிகளை ஏன் உடைத்து வருகிறார்களென்பதை அறியாமல் திணறினாள்.

அப்படி மேற்பகுதியை அவர்கள் மிக மும்முரமாகப் பெயர்த்துப் பலகைகளைத் தடால் தடாலென்று தள்ளிய ஓசை வேதனைப்பட்ட அவள் உள்ளத்தைத் திடீரெனத் தாக்கத் தொடங்கவே அவள் அதிர்ச்சியுற்று நின்றாள். அந்த அதிர்ச்சியைக் கண்ட கண்டியத்தேவன் ஒருவகையில் ஆச்சரியமும் இன்னொரு வகையில் பிரமிப்பும் அடைந்தான். கோட்டை மாளிகையில் செல்லமாக வளர்ந்த அந்தக் காரிகை மரக்கலத்தைப் பார்த்தவுடனேயே [illegible] கொண்டதை [illegible] அவளுக்கு மரக்கல அமைப்பிலிருந்து அறிவை எண்ணி ஆச்சரியப்பட்டான். மரக்கலத்தின் நிலையை எண்ணி எண்ணித் திக்பிரமைக்கும் உள்ளானான். இந்த இருவகை உணர்ச்சிக்கு உள்ளான கண்டியத்தேவனை நோக்கிய மஞ்சழகி, "தேவரே! மரக்கலத்தின் மேற்பகுதியைப் பிரிக்கிறீகளே?" என்று வினவினாள் கவலை நிரம்பிய குரலில்.

"ஆம் மகாராணி" என்றான் கண்டியத்தேவனும் கவலை தோய்ந்த குரலில். அவன் பதில் அவளைத் தூக்கிவாரிப் போட்டது. கண்டியத்தேவன் தன்னை ஏளனம் செய்கிறானா என்று அவன் முகத்தை ஏறிட்டு நோக்கினாள். அவன் முகத்தில் ஏளனக் குறி சிறிதுமில்லாததால் மிகுந்த குழப்பமடைந்து. "என்ன அப்படி அழைக்கிறீர்கள் தேவரே?" என்று வினவினாள்.

கண்டியத்தேவன் அவளை மிகுந்த மரியாதையுடன் திரும்பி நோக்கி, "என்ன கேட்கிறீர்கள் மகாராணி?" என்றான் மீண்டும். மஞ்சளழகியின் முகத்தில் குழப்பம் முன்னைவிட அதிகமாகப் படர்ந்தது. "நான் மகாராணியா?" என்று வினவினாள் குழப்பத்துடன் சற்றுக் கோபம் துளிர்ந்த குரலில்.

"அப்படித்தானிருக்க வேண்டும்?" என்றான் கண்டியத்தேவன். "அப்படித்தானிருக்க வேண்டும் என்றால்?" கோபம் சற்று அதிகம் தொனித்த குரலில் எழுந்தது மஞ்சளழகியின் கேள்வி. "இல்லாவிட்டால் இளையபல்லவர் உங்களை அப்படி அழைக்கமாட்டார்."

"இளையபல்லவரா! சோழர் படைத்தலைவரா?" ஆம்அவர் அப்படி என்னை இதுவரை அழைக்கவில்லையே. இனிமேல் அழைக்கலாம். எப்படித் தெரியும் உங்களுக்கு? உங்களை மகாராணி என்று அழைக்கும்படி அவர்தான் கட்டளையிட்டிருக்கிறார். எப்பொழுது இட்டார் கட்டளை? "நேற்றிரவு."

மஞ்சளழகியின் இதயம் வேதனை அலைகளில் பல முறை புரண்டது. அவள் மனம் சில விநாடிகள் சென்ற இரவின் விபரீதத்தை இளையபல்லவன் குடித்து உளறிக்கொண்டிருந்த நிலையை எண்ணி எண்ணிப் புழுங்கியது.

(தொடரும்...)

# குடிப் பழக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

416



வலம்புரியின் மருத்துவச்சுடர்

## நாங்கள் கசநோயை முடிவுக்கு கொண்டுவருவோம்

TB கசம் ஒரு கொடிய தொற்று நோயாக உலகம் முழுவதும் காணப்படுகின்றது. இன்னும் முக்கிய பிரச்சினை என்னவென்றால் Drug Resistant. TB உலகளாவிய ரீதியாக அதிகரித்துச் செல்கிறது. உலகில் ஒவ்வொரு நாளும் அண்ணளவாக 4400 மக்கள் TB நோயினால் இறக்கிறார்கள் மற்றும் 30 000 மக்கள் இந் நோயினால் புதிதாகப் பாதிக்கப்படுகிறார்கள்.


**இலங்கையில்**

- TB நோயினால் வருடாவருடம் 500-600 வரையான மக்கள் தமது உயிரை இழக்கிறார்கள்.
- 7000-8000 வரையாக புதிய நோயாளர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள்.
- ஆனால் WHO கணிப்பின்படி கிட்டத்தட்ட 13,000-14,000 நோயாளர்கள் ஆண்டுதோறும் கண்டுபிடிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.
- எனவே கிட்டத்தட்ட 4000-5000 நோயாளர்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கிறார்கள்.

Eg: 2002 ஆம் ஆண்டு 8340 TB நோயாளர்கள் இலங்கையில் புதிதாக அடையாளப்படுத்தினார்கள். கிட்டத்தட்ட 58% Case notificationrate WHO இன் கணிப்பீட்டின் தொகையுடன் பார்க்கும்போது இவ்வாறு 'Undected' TB நோயாளி ஒருவர் ஒரு வருடத்தில் 10-15 பேரிடம் நோயை பரப்புகிறார். இதனால் தான் இந்நோயை கட்டுப்படுத்துவது கடினமாக உள்ளது. ஆனால் முயற்சி வெல்லும்.

இலங்கையில், பல காரணிகள் இந்நோயை முழுதாக கண்டுபிடிக்க முடியாமல் இருப்பதற்கு காரணமாக உள்ளது.

Covid19 தொற்று



பல Health Staff இந்நோயை (Covid19) கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டுக் கொண்டு இருப்பது.

மக்கள் தமது நோயை கண்டு பிடிப்பதற்காக சுகாதாரத்துறையை நாடாது இருப்பது.


இருப்பினும் இலங்கையில் காணப்படுகின்ற Well establistel Health system தொடர்ந்து அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு நோயின் தாக்கத்தை குறைக்க முயன்று கொண்டிருக்கிறது. உ+ம்: 65 பேர், 100,000 பேரில் இந்நோயினால் பாதிக்கப் பட்டிருந்தார்கள். 2015 இல் இதை 13 பேராக 100,000 பேரில் 2035 இல் கொண்டுவர தொழிற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்கு WHO "Latert TB electronic Patient information System" மேலதிகமாக இலங்கைக்கு உதவி வருகிறது. இதை விட இந் நோயை விரைவாக கண்டுபிடிப்பதற்கான புதிய நோய் அறியும் முறையான (IGRA) Interferon gama releas assay என்னும் whale blood assay (Test) fo diagnose TB in high rislc group papulahm.

இப்போது எமது நாட்டிற்கு முக்கியமாக செய்ய வேண்டியது என்னவென்றால் "missing 4000 cases per year" கண்டுடித்தலாகும். இதை செய்வதனால் மேலதிக தொற்றை குறைத்து ( Break the cycle of Transmission) நாம் WHO இன் கருப்பொருளான 2035 இல் காசநோயை ஒழிப்போம் என்ற வாசகத்தை நிறைவு செய்ய யாவரும் ஒத்துழைப்போம். எனவே மக்களாகிய நீங்கள் உங்களுக்கோ உங்கள் உறவினர்களுக்கோ (2 வாரங்களுக்கு மேலாக) உடல் நிறை குறைதல், அதிகூடிய முட்டுத் தன்மை இருப்பின் உடனடியாக வைத்தியரின் ஆலோசனையைப் பெறவும்.

**பொது வைத்திய நிபுணர்**
**தம்பிப்பிள்ளை**
**பேரானந்தராசா.**

## தியானித்து வணங்கினால் தீமைகள் நீங்குமா?



கடவுளைப் பக்தியுடன் மனமுருகி, மனம் ஒருமித்து தியானித்து வழிபடும் முறை அன்று தொட்டு எல்லா மதங்களிலுமே பின்பற்றப்பட்டு வருகின்றது. இதன்மூலம் பல தீமைகள் நீங்கும், நாம் காப்பாற்றப்படுவோம், சுகம்பெறுவோம், பல நல்ல விடயங்கள் நடைபெறும், மனம் சாந்திபெறும் என்ற நம்பிக்கை மதநம்பிக்கை உடைய அனைவரது மனங்களிலும் குடிகொண்டிருக்கிறது. இவை உண்மைதானா? என்ற கேள்வியும் பலரது மனங்களிலே எழத்தான் செய்கிறது.

ஆனால் இவை உண்மை என ஆராய்ச்சிகள் நிரூபித்து வருகின்றன.

மனம் ஒருமித்து மனமுருகி தியானித்து வணங்குவது என்பது Meditation, Relaxation, சுவாசப்பயிற்சி என்ற மருத்துவ விஞ்ஞானப்பதங்களுக்குள் அடங்குகிறது.

இவற்றில் ஏற்படும் அனுகூலங்கள் பல இவற்றை ஒழுங்காகச் செய்துவந்தால் மனப்பாரம் குறைவதுடன் பல கொடிய நோய்களிலிருந்தும் காப்பற்றப்படுவதுடன் உடலில் நல்ல பல மாற்றங்கள் நடப்பதற்கும் இது வழிகோலும் என்று விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அதாவது மதவழிபாட்டுமுறைகள் மனிதனை உடற்பலமும் ஆன்மீக பலமும் பொருந்தியனவாக ஒரு ஆரோக்கியமுள்ள மனிதனாக வாழ்வதற்கு வழிசமைத்து நிற்கின்றது.

**சி. சிவன்சுதன்,**
**பொது வைத்திய நிபுணர்.**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை ஒழிப்பு வேலைத்திட்டம் எமது ஆட்சியில் முன்னெடுக்கப்படும்

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச



(கொழும்பு)

நாட்டின் வறுமையை போக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி அடித்தளம் இடும் என அதன் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்களின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனசவிய, அஸ்வெசும, கெமிதிரிய, சமுர்த்தி போன்ற வேலைத்திட்டங்களில் காணப்படுகின்ற சிறந்த விடயங்களை உள்ளடக்கி அவற்றிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து, வறுமையை 24 மாதங்களுக்குள் ஒழிப்பதற்காக மாதம் ஒன்றுக்கு தலா 20 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வறுமை ஒழிப்பு வேலைத் திட்டம் பணம் வழங்கும் வேலைத்திட்டம் அல்ல.

அது வறியவர்களை வறுமையிலிருந்து மீட்கின்ற வேலைத்திட்டமாகும்.

அத்துடன் மூலதனங்களையும் வழங்கி வறுமையிலிருந்து மக்களை மீட்பதற்கான புதிய வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படும்.

இந்த சந்தர்ப்பத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வழங்குகின்ற சேவை கௌரவமாகக் கருதப்படும்.

சமுர்த்தி வேலைத்திட்டத்தினூடாக கொவிட் காலத்தில் அரசாங்கத்திற்குக் கடன் பெறவும் முடியுமாக இருந்தது.

தற்போதைய அரசாங்கம் அந்த கடனைச் செலுத்தவும் இல்லை. கடனுக்கான வட்டியைச் செலுத்துவும் இல்லை.

அரசாங்கம் 43 பில்லியன் ரூபாய் கடனை மீளச் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கின்றது.

சமுர்த்தி வேலைத்திட்டத்தை எவரேனும் வீழ்த்துவதற்கு முயற்சி செய்தால் அதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது.

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு குறைபாடுகள் காணப்படுகின்றன.

பதவி உயர்வு குறைபாடுகள் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சமுர்த்தி கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டவர்களுக்கும் நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (நி)


காணி விற்பனைக்கு உண்டு

கோண்டாவில் பழனி ஆண்டவர் கோவிலுக்கு அருகாமையில் அமைதியான, கௌரவமான சூழலில் 09 பரப்பு காணி, 1 1/2 பரப்பாக பிரித்து விற்பனைக்கு உள்ளது.

(சி-2433)

தொடர்புகளுக்கு:-
John 077 991 0166



ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம:
அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் குரோதி வருடம் புரட்டாதித் திங்கள் 26 ஆம் நாள் (12.10.2024) சனிக்கிழமை முதல் கௌரி விரதம் ஆரம்பமாகவிருப்பதால் விரதகாரர்கள் தங்கள் பெயர் நட்சத்திரங்களை பதிவு செய்து கொள்ளலாம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கோவில் திறந்திருக்கும் நேரம்:
காலை: 6.00 மணி முதல் 9.00 மணிவரை
மதியம் 11.30 மணிமுதல் 12.30 மணிவரை
மாலை:4.00 மணிமுதல் 6.00 மணிவரை
வெள்ளி, செவ்வாய்
காலை: 6.00 மணி முதல் மதியம் 12.30 மணி வரை

(1939) தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள்



கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1988 இந்து
நட்சத்திரம்: சித்திரை
12 இல் செவ்
கி.பா: 15
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L, மில்
எதிர்பார் ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14774

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: பூராடம்
8 இல் செவ்
கி.பா: 71 1/2
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Bsc, Office Assistant
எதிர்பார்ப்பு: படித்த பெண், அரச வேலை
தொ.இ: B/14775

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 52
உயரம் :5'9"
தகைமை/தொழில்: Bsc, Bank Manager
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம், விவாகரத்து
தொ.இ: B/14776

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 17 1/2
உயரம்: 5'
தகைமை/தொழில்: Business Management
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/13569

பிறப்பு:2000 இந்து
நட்சத்திரம்: கேட்டை
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/14723

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
8 இல் சூரி செவ்
கி.பா: 42 1/2
உயரம் :5'5"
தகைமை/தொழில்: IT Diploma
எதிர்பார்ப்பு: உத்தியோகம், சைவபோசனம்
தொ.இ: G/14726

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 120 | 200 | 150-200 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 180 | 150-180 | 300 |
| தக்காளி | 220 | 200 | 250 | 220 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 300 | 240 | 150-200 | 200 |
| கோவா | 220 | 280 | 300 | 250 | 300 |
| கரட் | 250 | 250 | 300 | 280 | 300 |
| பூசணி | 60 | 50 | 100 | 60 | 80 |
| புடோல் | 60 | 130 | 80 | 80 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 240 | 150-200 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 150-300 | 320 |
| பெரிய வெங்காயம் | 280 | 180 | 250 | 260 | 280 |
| பாகற்காய் | 400 | 250 | 300 | 350 | 320 |
| வெண்டக்காய் | 60 | 80 | 100 | 90-100 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 180 | 240 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 250 | 100 | 120-150 | 400 |
| லீக்ஸ் | 320 | 300 | 320 | 300 | 300 |
| பீற்றூட் | 80 | 120 | 100 | 80-120 | 150 |
| கறிமிளகாய் | 400 | 400 | 450 | 450 | 500 |
| முருங்கைக்காய் | 350 | 300 | 200 | 300-400 | 250 |
| போஞ்சி | 400 | 300 | 350 | 300 | 400 |
| கத்தரி தம்புள்ள | 200 | 150 | -- | -- | 200 |
| கீரை - 1 பிடி | 130 | 140 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 350 | 300 | 300 | 250-300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 140 | 120 | 90-130 | 100-140 |
| இராசவள்ளி | -- | 900 | -- | 650 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 120 | 90 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 70 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 80 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமி துஷ்பிரயோகம் தொடர்பில் தந்தை கைது

(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 வயது சிறுமி ஒருவர் தந்தை மற்றும் இளைஞர் ஒருவரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட நிலையில் நேற்று சிறுமியின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஸ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயதிலக அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பாதிக்கப்பட்ட 15 வயது சிறுமியை மீட்ட பொலிஸார் குறித்த சிறுமியிடம் வாக்கு மூலங்களை பதிவு செய்த பின்னர், வைத்திய பரிசோதனைக்கு அனுப்பிய நிலையில் சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

விசாரணைகளின் போது கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் குறித்த சிறுமியை தந்தை துஷ்பிரயோகம் செய்தமை தெரியவந்துள்ளதுடன், குறித்த சிறுமியின் வீட்டில் தங்கியிருந்த இளைஞர் ஒருவரும் கடந்த மாதம் 28 ஆம் திகதி குறித்த சிறுமியை துஷ்பிரயோகம் செய்துள்ளதாகவும் சிறுமி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, சிறுமியின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளதுடன், இளைஞரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த தந்தை தனது மூத்த மகளை 2020 ஆம் ஆண்டு துஷ்பிரயோகம் செய்த நிலையில் கைது செய்யப்பட்டு அது தொடர்பான வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-250)

# தேர்தல் விதி மீறல்கள்; 10 முறைப்பாடுகள் பதிவு

## கிளி.மாவட்ட பதில் அரச அதிபர்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இதுவரை 10 தேர்தல் விதிமுறை மீறல் கள் தொடர்பான முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்று இருப்பதாகவும் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ் முரளிதரன் தெரிவித்துள்ளார்

நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடை பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

தொடர்ந்து குறிப்பிடுகை யில் கிளிநொச்சி மாவட் டத்தில் ஒரு லட்சத்து தொள் ளாயிரத்து ஏழு வாக்கா ளர்கள் வாக்களிக்க தகுதி உடையவர்களாக உள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 108 வாக்களிப்பு நிலையங் களும் எட்டு வாக்கெண்ணும் நிலையங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது

இதுவரை தேர்தல் தொடர் பான பத்து முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றி ருக்கின்றன. இதில் ஆறு முறைப்பாடுகள் சிறிய அள விலான முறைப் பாடுகளும் நான்கு முறைப்பாடு கள் சாதாரண முறைப்பாடுகளா கவும் காணப்படுகின்றன.

அதேநேரம் தேசிய அடையாள அட்டை இல்லாத வர்களுக்கு தற்காலிக அடையாள அட்டைகளை வழங் குவதற்கான செயற் பாடுகள் கிராம அலுவலர்கள் ஊடாக முன்னெடுக்கப்பட் டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-6-315)

# மகளிர் துடுப்பாட்ட போட்டி நாளை

(யாழ்ப்பாணம்)

மகளிர் துடுப்பாட்ட அணிகளுக்கு இடையிலான மாபெரும் துடுப்பாட்டப் போட்டி முதல் முறையாக யாழ்ப்பாணம் அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டு மைதானத்தில் "Ariyalai Allstars Womens cricket league 2024" எனும் பெயரில் நாளை திங்கட்கிழமை மற்றும் நாளை மறுதினம் வரை தடை பெறவுள்ள இந்த சுற்றுப் போட்டியில் 5 அணிகள் மோதவுள்ளன.

இப்போட்டியின் இறுதி நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சட்டதரணி வி. மணிவண்ணன் கலந்து கொள்ளவுள்ளார் என ஏற் பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-6-33)

# மரங்கள் அழிக்கப்படுவதை தடுத்து நிறுத்துங்கள்

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி நல்லூர் கிராம அலுவலர் பிரிவில் உள்ள தியாகம் வெளியில் பச்சை மரங்களை வெட்டி அழிக்கப்படுவதாக மக்கள் விசனம் வெளி யிட்டுள்ளனர்.

பூநகரி பிரதேச செயலகத்தில் 2010 ஆம் ஆண்டிற்கு பின்னர் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் மரங்களை வெட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.


இவ்வாறு மரங்கள் அழிக்கப் படுவதை தடுப்பதற்கு அதி காரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-350)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3221

### நதுஷா




### மது




### பிரபு

மனைவி: மிதவாதம்னா என்னங்க?

கணவன்: சண்ட வரும்போது நீ என்ன திட்றல்ல அது!

மனைவி: பயங்கரவாதம்னா...?

கணவன்: சண்டைல நீ என்ன அடிக்கிறது


மனைவி: அப்போ அகிம்சைனா?

கணவன்: அதையெல்லாம் சமாளிச்சி நான் அமைதியா இருக்கேன்ல அது!


### கண்ணா




### கிரிஷாந்





### பிரவீன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்தமின்றி சிரியாவிற்குள் இறங்கி அடித்த இஸ்ரேல்
# ஈரானின் தளம் குண்டு வைத்து தகர்ப்பு



(ஜெருசலேம்)

சிரியாவில் அமைந்துள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் ஏவுகணை உற்பத்தித் தளம் ஒன்றுக்குள் புகுந்த இஸ்ரேலிய விசேட படை அந்த தளத்தை தாக்கி அழித்துள்ள தகவல் வெளியாகியுள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பில் இஸ்ரேலிய தரப்பிலிருந்து எந்த தகவலும் வெளிவராதபோதும் அண்மையில் இடம்பெற்ற இந்த சம்பவம் குறித்த விபரத்தை அமெரிக்க ஊடகம் வெளிப்படுத்தியுள்ளது.

லெபனான் எல்லையில் இருந்து வடக்காக சுமார் 40 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் மஸ்யாப் நகருக்கு அருகில் இஸ்ரேல் நடத்திய இந்த தாக்குதலில் 18 பேர் கொல்லப்பட்டதாக சிரிய அரச ஊடகம் தெரிவித்தது.

இது தொடர்பில் நியுயோர்க் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டிருக்கும் செய்தியில், உலங்கு வானூர்திகளில் வந்திறங்கிய இஸ்ரேல் விசேட படையினர் ஈரானால் கட்டப்பட்ட தளத்தை குண்டு வைத்து தகர்த்ததாகவும் அங்கிருந்த முக்கிய தகவல்களை எடுத்துச் சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் மற்ற அதிகாரிகளின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இந்த செய்தி வெளியாகியுள்ளது. இஸ்ரேல் படைகளை கட்டுப்படுத்துவதற்கு குறித்த தளத்திற்கு படையினர் குவிக்கப்படுவதை தடுக்கவே இஸ்ரேல் அங்கு வான் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

சிரியாவில் இஸ்ரேல் அடிக்கடி வான் தாக்குதல்களை நடத்துகின்றபோதும் அங்கு படையினர் தரையிறங்கி தாக்குதல் நடத்துவது வழக்கத்திற்கு மாறான செயற்பாடு என தெரிவிக்கப்படுகிறது. (நி-6)

## அந்தமான் தலைநகரின்
# பெயரில் மாற்றம்



(அந்தமான்)

அந்தமான் நிக்கோபாரின் தலைநகரம் போர்ட் பிளேரின் பெயர் ஸ்ரீ விஜயபுரம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நாட்டை காலனி ஆதிக்கத்தின் சுவடுகளில் இருந்து விடுவிக்கும் விதமாக அந்தமான் நிக்கோபார் தலைநகரின் பெயர் ஸ்ரீ விஜயபுரம் என மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் தெரிவிக்கையில், "ஒரு காலத் தில் சோழப் பேரரசின் கடற் படைத் தளமாக விளங்கிய தீவுப் பகுதி, இன்று நமது வளர்ச்சிக்கு முக்கிய தளமாக விளங்குகிறது என்றும் நமது சுதந்திரப் போராட்டத்திலும் சரித்திரத்திலும் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு இணையற்ற இடம் உண்டு" என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## ஜோ பைடனை சந்தித்தார்
# இங்கிலாந்து பிரதமர்




(லண்டன்)

இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் அமெரிக்காவுக்கு சுற்றுப்பயணம் சென்றுள்ளார்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் நேற்று வெள்ளை மாளிகையில் சந்தித்தார். அப்போது அவருக்கு விருந்து அளிக்கப்பட்டது.

ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு எதிரான பாதுகாப்பில் உக்ரைனுக்கு தொடர்ந்து வலுவான ஆதரவு வழங்குதல், பிணைக்கைதிகளை விடுவித்தல் மற்றும் காசாவில் போரை முடிவுக்குக் கொண்டுவர போர்நிறுத்த ஒப்பந்தம், சர்வதேச கப்பல் போக்குவரத்தைப் பாதுகாத்தல் உள்ளிட்ட உலகளாவிய பிரச்சினைகள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர். (நி-6)

## அம்புலன்ஸை நிறுத்தி ஏறிய நாய்
# வைரலாகும் வீடியோ



நாய்கள் விசுவாசத்திற்கு பெயர்பெற்றவை. அவற்றின் அன்பு நம்மை பல நேரங்களில் நெகிழ வைக்கும்.

பாசமான ஒருநாய், தனது எஜமானரை ஏற்றிச் சென்ற அம்புலன்ஸை துரத்திச் செல்லும் காட்சியால் சமூக வலைத்தளம் நெகிழ்ந்துள்ளது.


அந்த நாயின் எஜமானர் நோய்வாய்ப்பட்டு அம்புலன்ஸில் ஏற்றப்பட்டபோது, நாய், வெகுதூரம் வரை அம்புலன்ஸ் பின்னால் ஓடிச் சென்றது.

இதை கவனித்த அம்புலன்ஸ் பணியாளர்கள், இறுதியில் அம்புலன்ஸை நிறுத்தி, நாயை உள்ளே அனுமதித்த பின்பே அது அமைதியானது.

எக்ஸ் வலைத்தளத்தில் வெளியான இந்த வீடியோ 30 லட்சம் பேரின் பார்வைகளைப் பெற்றது.

கருத்து பகுதியில், பலரும் தங்கள் செல்லப் பிராணியின் அன்பைப் பற்றிய பல நினைவுகளைப் பகிர்ந்தனர். (நி-6)

## இஸ்ரேல் நடத்திய தாக்குதலில்
# 19 பாலஸ்தீனியர்கள் பலி



(காசா)

காசாவின் வடக்கு பகுதியிலும் தெற்கு பகுதியிலும் முன்னெடுக்கப்பட்ட தாக்குதலில் 19 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இஸ்ரேலுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

இதேவேளை காசாவில் இதுவரை 560,000 சிறுவர்கள் போலியோ தடுப்பூசிகளைப் பெற்றுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதில்லையேல் எப்போதும் இல்லை எனும் மந்திரச் சொல்லை சதா நினைவில் வையுங்கள்.

வலம்புரி

T.P-021 222 3378

## வீதியோரங்களில் கற்குவியல் கவனிக்க யாருளரோ!

தமிழர் பகுதிகளில் அரச நிர்வாகம் என்பது அசமந்தமாக இருப்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதிலும் உள்ளூராட்சி அமைப்புகள் தமது அதிகார எல்லைக்குள் நடக்கின்ற சட்ட விரோதங்களைக் கண்டும் காணாமல் இருப்பது மிகவும் வேதனைக்குரியது.

அதாவது அனுமதியற்ற கட்டுமானப் பணிகள் தாராளமாக நடக்கின்றன.

இதைவிட, தாம் தாம் நினைத்தபடி வீதியோரங்களை சீமெந்திட்டு உயர்த்தி நடைபாதையை இல்லாமல் செய்கின்ற வேலைப்பாடுகளும் வேகமாக நடந்தாகின்றன.

அதேநேரம், கட்டுமானப் பணியின் பொருட்டு சட்டப்படி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து, நடவடிக்கை மேற்கொள்பவர்களை அலட்சியப்படுத்தி, அலைக்கழிக்கின்ற உள்ளூராட்சி சபைகள்; சட்டவிரோதக் கட்டுமானப் பணிகளைக் கண்டுகொள்ளாமல் இருப்பதன் சூக்குமம் தான் தெரியாமல் உள்ளது.

இவை ஒருபுறமிருக்க, கட்டுமானப் பணிகளின் பொருட்டு தனிநபர்கள் வீதிகளில்–ஒழுங்கைகளில் கல்லையும் மண்ணையும் குவித்து வைத்திருப்பதனால், போக்குவரத்து மிகப் பெரும் ஆபத்துக்கு ஆளாகிறது.

உண்மை.கொக்குவில் ஆடியபாதம் வீதியில் டிப்பர் வாகனம் மோதி மாணவி ஒருவர் உயிரிழந்த சம்பவம் அனைவரும் அறிந்ததே.

இவ்வாறு பிரஸ்தாப மாணவி விபத்தில் சிக்குவதற்கு அந்த வீதியின் ஓரத்தில் இருந்த கற்குவியலும் காரணம் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

அதாவது கட்டுமானப்பணிகளின் பொருட்டு வீதியின் ஓரங்களில் கல்லையும் மண்ணையும் டிப்பர் வாகனத்தின் மூலம் பறிப்பவர்கள், அதனை அந்த இடத்தில் அப்படியே விட்டுவிடுகின்றனர்.

அவற்றை உடனடியாக அங்கிருந்து அகற்றாமல் அந்த இடத்திலேயே விட்டுவிடுவதால், வாகனங்களின் போக்குவரத்தும் பாதசாரிகளின் பயணங்களும் ஆபத்து நிறைந்ததாக அமைந்துவிடுகிறது.

இது தவிர, வீட்டு வளவில் தறிக்கப்பட்ட மரக்குற்றிகளும் வீதியோரங்களில் வைக்கப்படுகின்ற மிக மோசமான நிலைமை நம் பகுதிகளில் உள்ளன.

உதாரணத்திற்கு, யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில் ஒரு வேப்ப மரத்தின் பாரிய அடிப்பாகம் வீதியின் அருகில் வைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குச் செல்கின்ற மாணவர்களும் பெற்றோர்களும் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

குறித்த தெருவின் ஓரத்தில் வேப்ப மரத்தின் பாரிய அடிப்பாகம் வைக்கப்பட்டிருப்பதனால், அந்தப் பகுதியில் எந்நேரமும் விபத்து நடக்கக் கூடிய வாய்ப்பு உண்டு.

இருந்தும் அது பற்றி யாருமே கவனிப்பதாக இல்லை.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அரச அமைப்புகளும் பொலிஸாரும் உரிய நடவடிக்கை எடுத்து, வீதியோரங்கள் செம்மையாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

### தேர்தல் பிரசாரம்

# சிறுவர்களை ஈடுபடுத்துவது தொடர்பில் பல முறைப்பாடுகள்

### சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அரசியல் பிரசாரங்களில் பல்வேறு அரசியல் கட்சிகளும் சிறுவர்களை ஈடுபடுத்துவது குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.**

அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பாக ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள், பெரியவர்களின் உதவி, தலையீடு அல்லது வற்புறுத்தலுடன் இந்தத் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் சிறுவர்கள் பங்கேற்பதால் விபத்துக்கள் அல்லது உடல் மற்றும் மன உளைச்சல்களுக்கு உள்ளாக நேரிடும் என அதிகார சபை எச்சரித்துள்ளது.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தமது அதிகார சபைக்குள்ளதெனவும் இதனால் அந்த பொறுப்புகளை தாமதமின்றி நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம், ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சாசனத்தில் கையொப்பமிட்டு அதில் அங்கம் வகிப்பதுடன் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் சிறார்களின் பாதுகாப்பை உறுதி செய்ய கடமைப்பட்டுள்ளதாக அந்த சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

எனவே, சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களை அனைவரின் பொறுப்பாகக் கருதி தேர்தல் பிரசாரங்களில் சிறுவர்கள் பங்கேற்பதைத் தடுக்குமாறு பெற்றோர், பாதுகாவலர்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளையும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வலியுறுத்தியுள்ளது. (நி-6)

## சட்டத்தரணிகள் சங்க தலைவர் ராஜினாமா

(கொழும்பு)

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பதவியில் இருந்து ஜனாதிபதி சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இராஜினாமா செய்துள்ளார்.

BASL இன் ஐந்து பேர் கொண்ட குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து, அதன் தலைவர் கௌசல்யா நவரத்னவை பதவி விலகுமாறு ஏகமனதாக அழைப்பு விடுக்கப்பட்டது.

ஜெயிகா (JAICA) நிதி சர்ச்சையை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு நவரத்ன, BASL மற்றும் JICA இடை யேயான ஒப்பந்தத்தை கையாள்வதில் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படத் தவறியமை தலைவராக அவர் மீது வைத்திருந்த நம்பிக்கையை மீறுவதாகக் கண்டறிந்ததை அடுத்து இந்த ராஜினாமா இடம்பெற்றுள்ளது. (நி-6)

## தேர்தலை முன்னிட்டு மதுபானசாலைகளுக்கு பூட்டு

### கலால் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை கருத்திற்கொண்டு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படும் என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, செப்டம்பர் 21,22 ஆகிய திகதிகளில் மதுபானசாலைகள் மூடப்படும் என்று கலால் ஆணையாளர் ஜே. குணசிறி தெரிவித்துள்ளார். (நி-6)

## தனிநபர் வருமான வரி வீதத்தை குறைக்க அமைச்சரவை ஒப்புதல்

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தற்போது அறவிடப்படும் தனிநபர் வருமான வரி வீதத்தை குறைப்பதற்கு அமைச்சரவை திட்டமிட்டுள்ளது.

இதுவரை மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான வருமானத்தை ஈட்டும் நபர்கள் வரிக்கு உட்படுத்தப்பட்ட போதிலும், புதிய திருத்தத்திற்கு அமைவாக 150,000 ரூபாயிற்கும் அதிகமான வருமானத்தை ஈட்டும் நபர்கள் தனிநபர் வருமான வரிக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

இதனிடையே 6 வீதம் முதல் 36 வீதம் வரை 6 பிரிவுகளின் கீழ் அறவிடப்பட்ட வரி வீதமும் குறைக்கப்படவுள்ளது. (நி-6)

## ஊழல் மிக்க அரசியல் குடும்பங்களுக்குள் குவிக்கப்படும் அரசியல் அதிகாரங்கள்

### தேர்தல் பிரசாரத்தில் அநுரகுமார

(கொழும்பு)

அரசியல் அதிகாரம் ஒரு சில ஊழல்மிக்க அரசியல் குடும்பங்களுக்குள் குவிக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பலாந்தோவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 'ரட அனுரத' தேசிய மக்கள் படை யின் வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அதேவேளை, சந்ததி தலைமுறையாக அதிகாரம் பாயும் வகையில் சம்பந்தப்பட்ட குடும்ப ஆட்சியின் ஊடாக அரசியலும் நாட்டின் வளங்களும் மையப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அநுரகுமார திசாநாயக்க குற்றம் சுமத்தினார்.

தேசிய மக்கள் படையின் அரசியல் இயக்கம் மக்கள் கைகளில் இருப்பதாகவும், தற்போதுள்ள அரசியல் இயக்கத்தையும் மக்கள் கையில் எடுத்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

"கடந்த காலத்தில் தேர்தல் நடந்த போது இந்த நாட்டை ஆண்ட ஆளும் கும்பல் எப்போது தேர்தல் வரும் என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் இந்த முறை இந்த நாட்டு மக்கள் தேர்தலை எதிர் நோக்கி காத்திருக்கிறார்கள்.

அந்த ஆட்கள் கணிசமான அளவு வெறியில் இருக்கிறார்கள். அதனால் அடுத்த சில நாட்களில் அந்த ஆட்களிடம் இருந்து பறிபோகும் சக்தியைப் பாதுகாக்க என்ன மாதிரியான விடயங்களைச் செய்யலாம் என்று யோசித்து விவாதிக்கிறார்கள்.

அந்த தோழர்கள் புன்னகைக்கிறார்கள். பரவாயில்லை. அமைதியான தேர் தல் வேண்டும். வெற்றி பெறுபவர்கள் அமைதியை விரும்புகிறோம். இப்போது ஆட்சியை மாற்றும் வாய்ப்பு கிடைத்துள்ளது எனவும் அநுர தெரிவித்ததார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A/L இணைந்த கணிதம்

A/L 2025, A/L 2026 மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். (1944)

தொடர்புகளுக்கு:
**077 832 4002**

## பணிப்பெண் தேவை

யாழ். நகரிலுள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணி புரிவதற்கு பணிப்பெண் தேவை. (1945)

தொடர்புகளுக்கு:
**077 327 6502**

## வீடு விற்பனைக்கு

புனித ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு அருகாமையில் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய 1 ¾ பரப்பு வீடு விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம். (1948)

தொடர்புகளுக்கு:
**076 116 3919**

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

**1%**
- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு: (1908)
**075 033 6759**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் பிரதான வீதி முகப்புடன் 55 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான காப்பற் வீதி முகப்புடன்.
- அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமை.
- சர்வதேச ஆங்கில பாடசாலை அருகாமையில்.
- பெற்றோல் செட் திருமண மண்டபங்கள் வியாபார நிலையங்கள் வீடுகள் அமைக்க உகந்த காணி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- 5 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- சீரான ஆவணங்கள்.
- யாழ்நகரில் இருந்து 4 km தூரத்தில். (1947)

பார்வையிடும் நேரம்
காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு :
**077 623 4204 / 077 030 2523**

## பௌதிகவியல் வகுப்பு

அரச பரீட்சையில் புள்ளித்திட்டமிடல், மேலதிக பிரதம பரீட்சகராக பல வருடம் கடமையாற்றிய அனுபவமிக்க பட்டதாரி ஆசிரியரால் தமிழ் மொழி மூல பௌதிகவியல் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. (1893)

**077 600 4896**

## இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். (344)

**APEX TRAVELS**
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN
GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER. (1819)
ENGLISH *30% Special offer for all the courses*
(வாழ்க்கை துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
**T.P : 077 780 3970, 074 007 1970**

## வாடகைக்கு

யாழ். மாநகர எல்லைக்குள் 3 அறை உள்ள மேல்மாடி வீடு வாடகைக்கு விடப்படும். சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. (3 பேர் மட்டும்) (1917)

தொடர்புகளுக்கு:
**077 938 7543**

## பதவி வெற்றிடம் - Sales Executive
### K.U.S Formwork & Scaffolding (PVT) LTD
### (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம்)

கொழும்பில் அமையப்பெற்றுள்ள பிரபல நிறுவனம் ஆகிய K.U.S Formwork and Scaffolding (Pvt) Ltd நிறுவனம் தனது உள்நாட்டு செயற்பாடுகளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திற்கு விரிவுபடுத்தி வருவதால் எங்கள் நிறுவனத்தில் இணைந்து கொள்வதற்கு தகுந்த அனுபவம் வாய்ந்த Sales Executive வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் தேவை.

**எதிர்பார்க்கப்படும் கல்வித் தகைமைகள்**
- விற்பனைத்துறையில் 2 வருட குறைந்தபட்ச அனுபவம் (Minimum 2 years of experience in the field of Sales)
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலில் சான்றுதல் (Certification in sales and marketing from a recognized institute)

**எதிர்பார்க்கப்படும் ஏனைய தகைமைகள்**
- செல்லுபடியாகும் ஓட்டுனர் உரிமம் மற்றும் வாகனம் வைத்திருத்தல் வேண்டும் (Should have a valid driving license (A, A1, B Class) and Vehicle)
- 22 - 40 வயதுக்கு இடைப்பட்ட ஆண்/பெண் (Male/Female between the age range of 22 - 40 years) (1362)

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அடிப்படைச் சம்பளம், வாகனக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் கமிஷன் வழங்கப்படும்.
விண்ணப்பிக்க விரும்புபவர்கள், சுயவிபரக்கோவையை hr@kus.com.lk எனும் Email முகவரிக்கு அனுப்பவும்.

**K.U.S Formwork & Scaffolding PVT Ltd**
**+94 112 572 727**



## கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்

A9 வீதி, கிளிநொச்சி. 021 320 8022, 021 228 3745

### ஆலய வயற்காணி குத்தகைக்கு விடுதல் காலபோகம் 2024/ 2025

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமான கீழ்க்குறிப்பிட்ட வயற்காணிகள் எதிர்வரும் 17.09.2024 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

| | |
|---|---|
| 1. மருதநகர் | 02 ¼ ஏக்கர் |
| 2. பெரியபரந்தன் LB2/D/5- | 10 ஏக்கர் |
| 3. பெரியபரந்தன் D/6- | 08 ஏக்கர் |
| மொத்தம் | 20 ¼ ஏக்கர் |

1. ஒரு ஏக்கருக்கு ஏலம் கூறப்பட்டு மொத்த ஏக்கர் பெறுமதி கணிக்கப்படும்.
2. ஏலத்தில் வயற்காணியைப் பெறுபவர்கள் (17.09.2024) பி.ப 2.00 மணிக்கு முன் முழுப்பணத்தையும் செலுத்த வேண்டும். தவறின் அடுத்த விவசாயிக்கு உரிமம் மாற்றப்படும்.
3. காசோலைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.
4. சகல விவசாயிகளின் நேரத்தையும் கருத்திற்கொண்டு குறிப்பிட்ட நேரத்திற்கு ஏலம் கூறப்படும்.

- நன்றி -
ஆலய பரிபாலனசபை சார்பில் (C-1187)

| ஸ்ரீகௌரிபாலா | மா.சிவராசா | க.வரதராசா |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
| 077 602 7147 | 077 540 7448 | 077 881 0184 |

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை. (1921)

தொடர்புகளுக்கு:
**077 919 1529**

## காணி விற்பனைக்கு

வீமன்காமம் வடக்கு, மாவிட்டபுரம் வெங்காயச் சங்கத்திற்கு அருகில் 3 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு. (1946)

**077 729 4322**
**021 222 6236**

## காணி தேவை

பூநகரி, மன்னார் பகுதிகளில் காணி தேவை. (345)

தொடர்புகளுக்கு :
**077 374 4652**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 240/= | Max5kg | |
| 1 Kg prima கோதுமை மா | - 159/= | | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 376/= | | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 269/= | | |
| 1 Kg றவை | - 284/= | | |
| 1 Kg உளுத்தம் பருப்பு | - 799/= | | |
| 1 Kg செத்தல் மிளகாய் | - 699/= | | |
| 1 Kg மல்லி | - 380/= | | |
| 1 Kg கீரி சம்பா அரிசி | - 240/= | | |
| 400 g சஸ்ரயன் | - 3399/= | | ~~3900/=~~ |
| 01 சன் பப்படம் | - 185/= | | ~~235/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 140/= | | ~~165/=~~ |
| 01 Ocean மீன் ரின் | - 340/= | | ~~500/=~~ |
| 400 g வட்டவல தேயிலை | - 999/= | | ~~1120/=~~ |
| 70 g பேபி சோப் | - 115/= | | ~~145/=~~ |

400g Anchor
1000/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (344)
Happy Supermarket
**0777 8080 30**

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)



CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-1184)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## V2 VISA SERVICES
### கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**
- Student Visas
- Online Appointments
- இந்திய Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-1184)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள ஆர்.வி.ஜி பீடி கம்பனிக்கு பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

1. ஆர்.வி.ஜி பீடி கம்பனிக்கு வேலையாட்கள் தேவை (21 - 35 வயதிற்குட்பட்டவர்கள்) ஆண்கள்
2. விற்பனையாளர் ( 21 - 35 வயதிற்குட்பட்டவர்கள்)

ஆர்.வி.ஜி பீடிகளை எமது ஸ்தாபனத்தில் நேரடியாகவும் பெற்றுக்கொள்ள முடியும். கீழக் காணும் முகவரிக்கு நேரில் வரவும். (1911)
ஆர்.வி.ஜி பீடி கம்பனி இல. 58, குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தொ. இல: **021 222 4766, 021 222 6806**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.190 ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோ.சைக்கிள்...

துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த முருகையா நிரோஜன் (வயது-28) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

கோவிற்சந்தைப் பகுதியில் சில மாதங்களுக்கு முன் மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த குறித்த இளைஞர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மேலதிக சிகிச்சைகளை யாழ்போதனா வைத்தியசாலையில் பெற்று வந்த நிலையில் குறித்த இளைஞர் கோமா நிலைக்குச் சென்றமையால் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்நிலையில் அவர் நேற்றைய தினம் வீட்டில் உயிரிழந்துள்ளார். (ந-7,60)

## சஜித் பிரேமதாஸ...

பாயில் இடம்பெறும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் கலந்து கொள்ளவுள்ளார். (ந-7)

## புலமைப்பரிசில்...

எனவே, இன்று காலை பரீட்சை நிலையங்களுக்கு அருகில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜய சுந்தர ஜனாதிபதி வேட்பாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ந-7)

## சஜித் ஆட்சிப்...

பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்குரிய உத்தரவாதத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ வழங்கவில்லை. மாறாக அவர் ஐக்கிய இலங்கை தொடர்பிலேயே பேசி வருகின்றார்.

உலகில் ஒற்றையாட்சியுடைய நாடுகள் உள்ளன, ஐக்கிய நாடுகள் உள்ளன. ஐக்கிய அரசு இராஜ்ஜியத்தை எடுத்துக்கொண்டால் மூன்று நாடுகள் இணைந்து உருவாக்கப்பட்டதொன்றாகும்.

எந்நேரத்தில் வேண்டுமானாலும் அந்நாடுகளால் பிரிந்து செல்ல முடியும். ஐக்கிய இராஜ்ஜியம் என்பது அப்படித்தான்.

சஜித் பிரேமதாஸ கடந்த காலங்களில் ஐக்கிய இலங்கை தொடர்பிலேயே பேசி வருகின்றார். அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில்கூட ஒற்றையாட்சி பற்றி குறிப்பிடப்படவில்லை. 13 இற்கு அப்பால் சென்று அதிகாரம் பகிரப்படும் எனக் கூறப்பட்டுள்ளது என்றார். (ந-7)

## தமிழ் மக்களின்...

கருத்துரைத்த அவர்,

வடக்கின் விடயங்களை அரசியல் பிரச்சினைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது. அப்பிரதேசத்திற்கு அபிவிருத்தியும் அவசியம். இல்லையெனில் ஏனைய மாகாணங்கள் முன்னேறுகையில் வடக்கு பின்தங்கிவிடும்.

மாகாண சபைகளை வலுப்படுத்தி அதிகாரங்களை வழங்குவது தொடர்பாகக் கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கியுள்ளோம். மத்திய அரசாங்கத்திற்கு உதவும் வகையில் 9 மாகாண சிற்றரசுகளின் கீழ் அபிவிருத்தி வேலைத் திட்டம் துரிதப்படுத்தப்படும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு எதிர்வரும் 5 வருடங்களில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்ப் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச் சினைகளையும் தீர்க்க இருக்கிறோம். பெண்களை வலுவூட்டும் சட்டத்தை நிறைவேற்றியுள்ளோம். குடும்ப வன்முறைகளைத் தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளேன். குடிபோதையில் வந்து மனைவியை அச்சுறுத்தினால் அந்தக் கணவரை பொலிஸில் நிறுத்த முடியும் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரசியல் பிரச்சினைக்கு மாத்திரம் அன்றி அபிவிருத்திகளையும் மேற்கொள்ள இருக்கிறோம் என்றார். (ந-7)


## இனவாதக்...

வாதக் கருத்துக்களை முன்வைத்திருந்தபோதிலும் அதனைச் சிங்கள மக்கள் பொருட்படுத்தாமல் உதாசீனம் செய்வதாகவும் தேர்தல் நோக்கர்கள் கருத்துரைத்துள்ளனர். (ந-7)

## பிரசாரக்...

இந்த நிறுவனங்கள் முழு நாள் நிகழ்வுக்கு ஒரு நபருக்கு சுமார் ரூ. 3,000 உம்குறுகிய கால நிகழ்வுகளுக்கு ரூ. 1,500 அறவிடுவதாகவும் தெரிவித்தார். (ந-7)

1ஆம் ஆண்டு
# நினைவஞ்சலி



பிறப்பு 16 . 08 . 1943

இறப்பு 28 . 08 . 2023

அமரர்
## திசவீரசிங்கம் கெங்காதரன்

(ஓய்வுபெற்ற அதிபர் - யா/புலோலி மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை யா/உடுப்பிட்டி சைவப் பிரகாச வித்தியாலயம்)

திதி : வளர்பிறை துவாதசி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வத்தில்
ஒன்றாகக் கலந்திருக்கும் எங்கள்
அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

இலகடி,
அல்வாய் கிழக்கு, அல்வாய். (C-1186) குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## மங்களம் மகேஸ்வரி



பிறப்பு 09.03.1936 இறப்பு 13.09.2024

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் சாத்தனார் கலட்டி அளவெட்டி வடக்கினைப் வசிப்பிடமாகவும் கொண்ட மங்களம் மகேஸ்வரி அவர்கள் கடந்த 13.09.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17.09.2024 செவ்வாய்க்கிழமை சாத்தனார் கலட்டி, அளவெட்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 711 1730
(C-1185)

மஹஜன சம்பத
திகதி 2024.09.14
சீட்டிழுப்பு இலக்கம் 5596
M 6 4 0 5 1 0
அத சம்பத
M 0 5 1 0
சீட்டிழுப்பு இலக்கம் 171

தன நிதானய
திகதி - 2024.09.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1626
W 43 46 48 78 W
Double Chance 30687

மெகா பவர்
திகதி 14/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1944
U 24 42 53 55 56
Double Chance 47144

லக்கி 7 VIP
திகதி 2024.09.14
சீட்டிழுப்பு இலக்கம் 422
H 4 8 2 8 8 9 H

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3838
சீட்டிழுப்பு திகதி 14.09.2024
S 18 45 60 63
S 89819

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.14
சீட்டிழுப்பு இலக்கம் 905
மகரம் 11 23 26 53 மகரம்
61578 14

உத்தியோகபூர்வ முடிவுகள்
14.09.2024 வெற்றி வாரம் 304 வர்ணம் நீலம்
P 0 0 6 4 7 1
ரூ.22,044,060.00
28330

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2570 வர்ணம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 14.09.2024 தினம் சனிக்கிழமை
10 14 25 40 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,769,587.20

சனிதா
திகதி 2024.09.14 வெற்றி வாரம் 4731
12 48 54 71 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,002,014.40
06592

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4282 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.09.14 தினம் சனிக்கிழமை
15 19 45 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,444,750.80
185262

X 18 04 23 42 47
1746 சிவப்பு 14.09.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 544,989,739.40

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் 2396
சீட்டிழுப்புத் திகதி : 2024.09.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,985,545.60
11 20 27 43 R
274666

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சகலருக்கும் வெற்றி ஐக்கியமான நாடு

# வெறுப்பை தோற்கடித்து எழுவோம்

அச்சம், வெறுப்பு மற்றும் கோவம் என்பவற்றின் ஊடாக தேசத்தை கட்டியெழுப்பும் கட்டுக்கதைகள் உங்கள் முன்னால் விதைக்கப்பட்டு வருகிறது. உண்மை என்னவெனில் இருண்ட யுகத்திலிருந்து வெளிப்பட்ட எதுவும் பிரகாசிக்காது என்பதேயாகும். இலங்கையை கட்டியெழுப்பும் ஒரே வழி ஐக்கியமாக திகழ்வது மாத்திரமே. ஒரே குறிக்கோளை நோக்கி பயணிப்போம். அனைவருக்கும் ஒரே வெற்றியை பெற்றுக்கொடுப்பதனூடாக வலிமையான இலங்கையை கட்டியெழுப்புவோம்.

சிலரின் வெற்றி, அநேகரின் தோல்வி. அனைவருக்கும் வெற்றி என்பதே முழு தேசத்தினதும் வெற்றியாகும்.

எம் தேசத்தை வெற்றி பெற செய்வோம்!

සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
**Sajith Premadasa**

www.sajith.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org